www.padippakam.com


# புதிய பூமி

PUTHIYAPOOMI — පුදිය පූමි

சுற்று 1 ஒக்டோபர் 1994 விலை ரூபா 7/= சுழற்சி 5


## வாழ்வா இல்லை சாவா?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் யூ.என்.பியின் வாழ்வுக்கும் சாவுக்குமிடையிலான போராட்டமாகும் என்று யூ.என்.பியின் பொதுச்செயலாளர் டாக்டர். காமினி விஜேசேகர சண்டே லீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். பொ.ஜ.ஐ. முன்னணி வடக்கு கிழக்கு பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்துள்ளது. லஞ்சம், ஊழல், மோசடிக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சூரியகந்தையின் எலும்புக்கூடுகள் மீண்டும் தோண்டப்படுகின்றன.
எனவே யூ.என்.பிக்கு மக்கள் வாழ்வளிப்பார்களா?

# அரசாங்கத்துக்கு எச்சரிக்கை!

**இ.தொ.கா தலைவர் தொண்டமானினதும், இ.தொ.காவினதும் ஆதரவை ஏற்றுக் கொள்வதில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிதானத்துடன் நடந்து கொள்ளல் வேண்டும் என்று அரசாங்க ஆதரவு இடதுசாரி தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.**

**பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்தை ஆதரிப்பது என்பது இ.தொ.காவிற்கும் தொண்டமானுக்கும் உள்ள ஜனநாயக உரிமையாகும். ஆனால் அரசாங்கத்தில் சில பதவிகளையும், அந்தஸ்தையும், சலுகைகளையும் பெறும் நோக்குடன் ஆதரவு வழங்கப்படுமாயின் அது குறித்து நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.**



தொண்டமான் பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாக கூறிவருவது தொடர்பாக லங்கா பொதுச் சேவையாளர் சங்க தலைவர் ஜயரட்ன மலியகொட அவரது அபிப்பிராயங்களை புதியபூமிக்குத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது, ''1964 ஆம் ஆண்டு இடதுசாரி கூட்டரசாங்கத்தை தூக்கியெறிய பாடுபட்ட தலைவர்களில் தொண்டமான் முக்கியமானவராவார். 1970-77 அரசாங்கத்திற்கு எதிராக அவர் யூ.என்.பியுடன் சேர்ந்து செயற்பட்டார். தொண்டமான் அவருடைய சொந்த நிலையை பாதுகாத்துக் கொள்வதற்காக எதையும் செய்யக்கூடியவர். பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பது கூட அவரது சொந்த நலனைப் பாதுகாப்பதற்கே ஆகும்.

தொண்டமானை கண்மூடித்தனமாக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமாயின் வரலாற்றில் திருத்தப்படமுடியாத அரசியற் தவறொன்றை அரசாங்கம் செய்வதாக இருக்கும். பெருந்தோட்டங்களில் அவரது பிடி தளர்வதனாலேயே புதிய அரசாங்கத்துடன் அவர் சேர்ந்து கொள்வது ப்ற்றி அக்கறை செலுத்துகிறார்.

அரசாங்கத்துடன் சேர்ந்திருக்காவிட்டால் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தில் இ.தொ.காவின் அங்கத்துவத்தை (தற்போதிருக்கும் பிரத்தியேக உரிமையை) பாதுகாத்துக் கொள்ள முடியாது என்று அவர் அஞ்சுகிறார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் மலையகத்தில் புதிய அரசாங்கத்தின் சார்பாக தொழிற்சங்கங்கள் வளர்ச்சியை நோக்கி முன்னேறுகின்றன. அதனாலும், திரு. செல்லச்சாமியின் புதிய தொழிற்சங்கத்தினாலும் இ.தொ.காவிற்கு சோதனை காலம் வந்துள்ளது. தொண்டமானும் இ.தொ.காவும் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.

கடந்த 17 வருடமாக யூ.என்.பி அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனும் அனுசரணையுடனும் பெருந்தோட்டங்களில் பெரிய சக்திவாய்ந்த தலைவராகக் காட்டிக் கொண்ட தொண்டமான், தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதைவிட யூ.என்.பியை பாதுகாப்பதையே பிரதான கடமையாகக் கொண்டிருந்தார். இதனை தொழிலாளர்கள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

எனவே தொண்டமானை அரசுடன் சேர்த்துக் கொள்வதில் அரசாங்கம் நிதானமாக நடந்து கொள்ளல் வேண்டும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தொண்டமானும் இ.தொ.காவும் பொ.ஜ.ஐ.முன்னணிக்கு எதிராக செய்த அழிவு பூர்வமான பிரசாரங்களை மறந்துவிட முடியாது.

'பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கம் அமைத்தால் மலையக மக்கள் மீண்டும் பட்டினியில் சாக வேண்டிவரும். தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் சொந்தமாக்கப்பட மாட்டாது. இந்திய பாஸ்போட் பெற்றுள்ள 84 ஆயிரம் பேரும் அவரது பிள்ளைகளும் உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பப்படுவார்கள்' போன்ற பிரசாரங்களை தொண்டமான் செய்தார்.

தொண்டமானின் உறவு குறித்து கவனமாக இருக்கும் அதே வேளை மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும். நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள கல்வி, வேலையின்மை, வீட்டுப்பிரச்சினை போன்றவற்றை அரசாங்கம் தீர்க்க வேண்டும்.

நாட்டின் ஏனைய மக்களுடன் மலையக மக்கள் சுயகௌரவத்துடன் சகவாழ்வு நடத்தக்கூடிய சூழ்நிலையையும் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்'' எனவும் அவர் தெரிவித்தார்.

## அநுரா தூதுவராக லண்டனுக்குப் போவார்?

யூ.என்.பியின் தேசியப்பட்டியல் எம்.பியான அநுர பண்டாரநாயக்க பிரிட்டனுக்கு இலங்கை தூதுவராக நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

அவர் யூ.என்.பியின் தேசியப்பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்து விட்டு யூ.என்.பி அங்கத்துவத்தையும் துறந்துவிட எண்ணம் கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

அதன்படி பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக அவர் நியமிக்கப்படலாம் என்று பேசப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் சபையின் இலங்கை பிரதிநிதியாக செல்ல விருப்பம் கொண்டிருப்பதாக அவர் முன்னர் அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்தார். எனினும் ஐ.நா. சபையின் இலங்கை பிரிதிநிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

யூ.என்.பி யின் உள்நிலைமையில் அதிருப்தியடைந்த அநுர பண்டாரநாயக்க அவரின் எதிர்காலம் குறித்து கவலைப்பட்டவராய் யூ.என்.பியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

பிரிட்டனுக்கான இலங்கை தூதுவராக லண்டனுக்கு விரைவில் அனுப்பப்படலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

## என்று திறக்கப்படும் இந்தக் கல்லூரி?





படிப்பகம்

www.padippakam.com



# நாட்டைக் குலுக்கிய பியகமப் போராட்டம்!



கையுறைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் 'அன்ஸல் லங்கா கம்பனி' பியக முதலீட்டு ஊக்குவிப்பு வலயத் (சுதந்திர வர்த்தக வலயம்)தில் கடந்த 51/2 வருடங்களாக இயங்கி வருகின்றது. யூ.என்.பி அரசாங்கம் எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளிநாட்டுக் கம்பனிகளை சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலிட அனுமதித்தது. அவ்வலயத்தின் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் சாதாரண உரிமைகள் கூட மறுக்கப்பட்டன.

அவுஸ்ரேலிய டன்லாப் பசுபிக் நிறுவனத்தின் இலங்கை கிளை நிறுவனமாக இயங்கும் அன்ஸல் லங்கா கம்பனியில் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 3 வருடங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். யூ.என்.பி. அரசாங்கம் இருந்த காலத்திலும் அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. இத் தொழிற்சாலையில் 3500 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைசெய்கின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவியேற்ற பிறகு தொழிலாளர்கள் தொழிலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அன்ஸல் நிறுனவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியும் பலனேதும் ஏற்படவில்லை.

அந்நிலையில் தொழிலாளர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 9ந் திகதி பிரதமரை சந்தித்து அவரின் தலையீட்டைக் கொண்டுவர அமைதியாக ஊர்வலத்தைத் தொடங்கினர்.

அவர்களின் கோரிக்கைகள்

1. 50 சதவீத சம்பள உயர்வு
2. வருடாந்தம் 35 நாட்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும்.
3. வைத்திய செலவாக ஒருவருக்கு 2000 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.
4. 1993 வேலை நிறுத்தத்தின் பின் வேலை நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும்.
5. நிரந்தர சேவையிலுள்ளோரின் தரங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
6. தொழிற்சங்க உரிமை வேண்டும்

அவர்களுக்கு ஆதரவாக 'செரமிக் வோல்ட்ஸ்' அலிடெக்ஸ் ஆகிய நிறுவனத்தை சேர்ந்த 8000 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அமைதியான பாத யாத்திரையில் ஈடுபட்டனர்.

பாத யாத்திரை சென்ற தொழிலாளர்கள் மீது பியகம பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இதனால் பல தொழிலாளர்கள் படுகாயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டனர். (கடந்த 3 மாத காலமாக நடைபெற்று வரும் போராட்டம் காரணமாக கைது செய்யப்பட்ட சில தொழிலாளர்கள் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.)

இச் சம்பவத்தை அடுத்து அன்ஸல் நிறுவனம் அதனது தொழிற்சாலைகளை மூடிவிடப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவித்தனர். இதனை அடுத்து பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க பல சிரேஷ்ட அமைச்சர்களுடன் பியகமவிற்குச் சென்று தொழிலாளர்களை நேரடியாகச் சந்தித்து பொலிசார் நடந்து கொண்ட விதம் பற்றி வருத்தம் தெரிவித்தார். தொழிலாளர்களுடன் கலந்துரையாடி தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பும்படிக் கேட்டுக் கொண்டார்.

தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்திற்குப் பின்னணியில் ஜே.வி.பியின் சதி முயற்சி இருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

ஜே.வி.பி இப்போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தினை முன்னெடுப்பதில்லை. அவர்கள் அன்றாடத் தொழிலாளர் பிரச்சினையைத் தூண்டி ஏதாவது செய்ய முற்படலாம். ஆனால் இப்போராட்டத்தினை அவர்கள் செய்யவில்லை. இவ்வாறான போராட்டங்களை ஜே.வி.பியினர் ''ஒரு கோப்பைக் கஞ்சிக்கான போராட்டம்'' என்று கிண்டல் செய்வதே வழக்கம்.

இவ்வாறு அன்ஸல் போராட்டத்தை முன்னெடுக்கும் தொழிலாளர் நடவடிக்கைக் குழுவினரும் தெரிவித்தனர். மேற்படி விடயத்தையே இலங்கைத் தொழிற்சங்க சம்பேளனத் தலைவர் பி. டபிள்யூ. சுபசிங்கவும் தெரிவித்தார். தற்போது அன்ஸல் நிறுவனத் தொழிற்சாலை இயங்குகிறது. ஆனால் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். காயப்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற

→ 11

## சந்திரிகாவின் எதிர்ப்பு !



"சுதந்திர வர்த்தக வலயத்தில் வந்து முதலீடு செய்யும் கம்பனிகள் அவற்றின் இலாப நோக்கத்தை மட்டுமே கருத்திற் கொண்டு முதலீடு செய்கின்றன. அவர்களின் லாபம் பாதிக்கப்பட்டால் அவர்கள் தொழிற்சாலைகளை மூடிவிட்டு வேறு நாடுகளுக்குச் சென்று முதலீடு செய்வார்கள். சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களுக்குச் சாதாரண உரிமைகள் கூட உறுதி செய்யப்படவில்லை. இதைப் புதிய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. பழைய அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பூரணமாக சுதந்திரம் வழங்கும் தொழிலாளர்களின் சாதாரண உரிமைகளைக் கூட மறுக்கும் விதத்திலான ஒப்பந்தங்களையே செய்துள்ளது. அதில் இப்போது புதிய அரசாங்கம் துரதிஷ்டவசமாக தலையிட முடியாதுள்ளது.

கடந்த 17 வருடங்களாக இருந்து வரும் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பதவியேற்று இரண்டு வாரங்களுக்குள் தீர்க்க வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது. அது சாத்தியமுமில்லை.

இப்போராட்டங்களுக்கு பின்னணியில் ஜே.வி.பி இருப்பதனை நாம் கண்டு பிடித்துள்ளோம். ஏனெனில் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த ஒரு தொழிலாளியை அஜித் குமார என்ற ஜே.வி.பி தலைவர் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் குண்டெறிந்தார் என்ற குற்றம் சாட்டப்பட்டிருந்தது. யூ.என்.பியின் தூண்டுதலினால் கம்பஹா மாவட்டத்தில் (ஜே.வி.பி) போட்டியிட்டார். ஜே.வி.பிக்கு யூ.என்.பி நிதியுதவி வழங்கியுள்ளது.

இப்போராட்டத்திற்கு பின்னணியில் யூ.என்.பியின் தூண்டுதலினால் ஜே.வி.பி செயற்படுகின்றது. அவர்களின் வழிகாட்டலினால் தொழிலாளர்கள் செயற்பட்டால், நாசவேலைகளில் ஈடுபட்டால், தொழிலை இழக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

இங்குள்ள வெளிநாட்டுக் கம்பனிகள் தொழிற்சாலைகளை மூடிவிடும். அதனால் தொழிலை இழக்கும் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மட்டுமன்றி இந்நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.

நாம் வெளிநாட்டுக் கம்பனிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்ய வழிசெய்வோம். எமக்கு சாதாரணமான சூழ்நிலை ஏற்படும் வரை பூரண உரிமைகளைப் பெற்றுத்தர முடியாது. எமது அரசாங்கத்திற்கு தலையிடி கொடுக்கும் சக்திகளின் விருப்பங்களுக்காக தொழிலாளர்கள் செயற்படாமல் தயவு செய்து வேலைக்குத் திரும்ப வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 'அன்ஸல்' கம்பனி திறக்கப்படும். தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படும்.

ஜே.வி.பியினரே எனது கணவரையும் கொலை செய்தனர். அவர்கள் இவ்வளவு காலம் சும்மா இருந்து விட்டு இப்போது எமக்கு பிரச்சினை கொடுக்க முற்பட்டுள்ளனர்.

யூ.என்.பி செய்தது போன்று அவர்களைக் 'காணாமல்' ஆக்க மாட்டோம். புதிய சட்டங்களை ஆக்கி ஒடுக்கவும் மாட்டோம். அவர்கள் எல்லை மீறி நடந்து கொண்டால் நாம் சும்மா இருக்க முடியாது. அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்'' என்று பிரதமர் தெரிவித்தார்.

## எதிர்ப்புக்கு மறுப்பு !



ல.தோ.ச. தலைவர் அபேசிங்ஹ

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இப்போராட்டம் தொடங்கவில்லை. கடந்த 3 மாத காலமாக இப்போராட்டம் நடைபெற்று வருகிறது. வெளிநாட்டு நிறுவன விடயங்களில் அரசாங்கம் தலையிட முடியாது என்று யூ.என்.பி அரசாங்கம் தெரிவித்தது. தேர்தலுக்கு முன்பு பொ.ஐ.ஐ.முன்னணி சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யப்படும் எனக் கூறினாலும் பதவியேற்ற பிறகு ஒரு விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அதனால் அரசாங்கத்தின் தலையீட்டைக் கோரியே நாம் கடந்த 9ந் திகதி பாதயாத்திரையை மேற்கொண்டோம். எமது பாதயாத்திரை பொலிசாரினால் முறியடிக்கப்பட்டது. அவர்களின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தவர்களை (இலக்கம் 3775) எல்.ஏ. அஜித் குமார என்ற அன்ஸல் நிறுவன தொழிலாளியே வைத்தியசாலையில் அனுமதித்தார். அவர் ஜே.வி.பி தலைவர் அஜித் குமார அல்ல.

படிப்பகம்

www.padippakam.com

புதியபூமி

47, மூன்றாம் மாடி
கொழும்பு சென்றல் சுப்பர் மாக்கற் கொம்ளெக்ஸ்
கொழும்பு-11



## மக்களின் தெரிவு அரசியல் தீர்வு

'வடக்கும் கிழக்கும்- தமிழர்களுக்கு
துறைமுகம் -முஸ்லீம்களுக்கு
பாணும் பருப்பும் -சிங்களவர்களுக்கு'

இந்த வாசகங்கள் கொண்ட போஸ்டர்கள் தென்னிலங்கையில் ஒட்டப்பட்டுள்ளன. இதை யார் செய்திருப்பார்கள் என்று சொல்லித் தெரிய வேண்டிய அவசியமிருக்காது. ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு யூ.என்.பி செய்திருக்கலாம் என்று பொலிஸ் புலனாய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலே குறிப்பிட்டவை போன்ற வாசகங்களைக் கொண்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டது இதுதான் முதற்தடவை இல்லை. இவற்றை விடவும் மிகவும் மோசமான வாசகங்களைக் கொண்ட போஸ்டர்களை இலங்கையின் வரலாறு நிறையவே கண்டிருக்கின்றது. அதனால் பல குழப்பங்களுக்கும் நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

அந்த வகையான போஸ்டர்கள் மட்டுமன்றி, பேரினவாத நடவடிக்கைகள் கூட புதிய வரலாற்றுப் பயணத்தை திசை திருப்பிவிட முடியாது என்பதற்கு அண்மைய வரலாற்று நிகழ்வுகள் நம்பிக்கை கொடுப்பனவாக அமைந்துள்ளன.

தென்மாகாண தேர்தலின் போது நாட்டை பொதுஜன ஐக்கிய முன்னணி தமிழர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் போவதாகவும், அதனை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவே தடுத்து நிறுத்த வல்லவர் என்ற வாசகங்களைக் கொண்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அதைப் பற்றிப் பாரிய விளம்பரங்களும் நடைபெற்றன. அவற்றிற்கு தென் மாகாண மக்கள் எடுபடவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியே வென்றது.

பாராளுமன்றத் தேர்தலின் போதும் கூட மீண்டும் அவ்வாறான இனவாதப் பிரச்சாரங்களை ஐ.தே.கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிரான ஆயுதங்களாகக் கொண்டது. பொதுஜன ஐக்கிய முன்னணியோ வடக்கு கிழக்குப் பிரச்சினைகளை இனப்பிரச்சினை என்றும் அதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துரைத்து மக்களின் பெரும்பான்மையோர் -குறிப்பாக பெரும்பான்மையின மக்களில் அதிகமானோர் பொ.ஜ.ஐ.முன்னணிக்கே வாக்களித்தனர்; பொ.ஜ.ஐ.முன்னணி ஆட்சியையும் அமைத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கம் செய்து வருகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான அதன் பிரதிநிதிகளின் பெயர்களை அறிவித்துள்ளது.

இராணுவ உயரதிகாரிகள் சிலர் இதனை விரும்பாத போதும் அரசாங்கம் வடக்கு மக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை நீக்கியது. யுத்த நிறுத்தம் ஏற்படுத்துவதற்கும் வடக்கு-கொழும்பு போக்குவரத்தை சீர் செய்யவும் அரசாங்கம் ஆலோசித்து வந்தது.

இதற்கிடையில் கடந்த 19ம் தகதி மன்னார் கடலில் 'சாகரவர்தன' என்ற கடற்படை கப்பல் புலிகளால் தாக்கப்பட்டது. அதிகமான கடற்படை அதிகாரிகள் உயிரிழந்தனர். யுத்த நிறுத்தத்திற்கு எதிராகவிருந்த பாதுகாப்புப் படையினர் இத் தாக்குதலுக்குப் பிறகு அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தக் கூடாது என வலியுறுத்தி வருகின்றனர். பௌத்த பேரினவாதிகளோ இத் தாக்குதலை அடுத்து இனிமேல் பேச்சுவார்த்தை சரிவராது என்று உரத்துப் பேசத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கத்தின் தகவல் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க இத் தாக்குதல் பேச்சுவார்த்தையை குழப்பாது என்றும் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் என்ன விலை கொடுத்தேனும் நாட்டில் அமைதி நிலைநாட்டப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நிபந்தனையின்றி அரசாங்கமும் புலிகளும் பேச விருப்பம் தெரிவித்துள்ளன. யுத்த நிறுத்தம் இன்னும் அமுல் செய்யப்படவில்லை. எனவே மேற்படி தாக்குதல் பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டிய அவசியத்தை இல்லாமல் செய்துவிடவில்லை என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தத்தின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ள புலிகள் இயக்கம் மேற்படி தாக்குதல்கள் அரச-புலிகள் பேச்சுவார்த்தைக்கு இடைஞ்சலாக அமையாது எனக் குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் யுத்த நிறுத்தம், அரச புலிகள் பேச்சு பற்றி இயக்கத்தின் பல்வேறு மட்டத்தினரதும் அபிப்பிராயங்களைக் கேட்டு வருவதாயும், அதனால் புலிகள் பேச்சுவார்த்தையில் அக்கறையாக இருக்கின்றனர் என்பதை விளங்கிக் கொள்ள முடியும் என்று சிங்கள நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான உரிமைகளை உறுதி செய்யும் வகையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் என்ன நடக்கும் என்பதை யோசிக்கவே வேண்டாம். அதன் விளைவு இப்போதே யோசிக்க முடியாத அளவிற்கு அழிவை கொண்டு வருவதாக இருக்கலாம்.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் என்ன நடக்கும் என்ற கேள்விக்கு பதிலளித்த கொழும்பு பல்கலைக்கழக அரசியற்துறை கலாநிதி ஜயதேவ உயன்கொட "பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் அது இந்நாட்டின் சகல மக்களினதும் துரதிஷ்டவசமாகவே இருக்கும். அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்க முடியாது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினரை விட யுத்ததில் ஈடுபடாத தரப்பினரான இந்நாட்டு மக்களே யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் -அரசாங்கம் -இராணுவம் ஆகியோரை விட யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இந் நாட்டு மக்களுக்கு பாரிய பொறுப்புண்டு. அந்த வகையில் இந்நாட்டு மக்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் அவர்களுக்குரிய பங்கை வகித்தே தீருவார்கள் என்று நான் நம்புகிறேன்" என்று தெரிவித்தார். இலங்கை ரூபவாஹினியில் கடந்த 25ம் திகதி இரவு நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு அவர் தெரிவித்த மேற்படி கருத்தை இந்நாட்டு மக்கள் கவனத்தில் கொள்வார்களாக.

இனவாத போஸ்டர்களோ, பூச்சாண்டிகளோ இந்நாட்டு மக்களை தடுத்து திறுத்தி விடமுடியாது என்று நம்புவோமாக!

# "யுத்த நிறுத்தம் நிபந்தனையல்ல"

வடபகுதி மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை நீக்கியமையினாலும், ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த ஆயுதக் கொள்வனவை நிறுத்தியமையினாலும் பாதுகாப்புத் துறை உயரதிகாரிகள் சிலர் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க மீது மனக்கசப்பு கொண்டவர்களாகத் தென்பட்டனர்.

பாதுகாப்புத்துறையில் சிலரிடையே நிலவும் மனக்கசப்பு பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கு ஆபத்தாக வந்துவிடக்கூடாது என்பதில் பிரதமர் கவனமாக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. அதனாலேயே உலக நிதியமைச்சர்கள் கூட்டம், உலக வங்கி மாநாடு என்பவற்றில் கலந்து கொள்வதற்காக தான் வெளிநாடுகளுக்கு செல்வதில்லை என்று முடிவு செய்திருந்தார்.

போது "திட்டமிட்டபடி பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகள் நடைபெறும். கடற்படை மீதான தாக்குதல் நிலைமைகளை பின்னடையச் செய்யாது, யுத்த நிறுத்தம் அமுலில் இல்லாத போது நடைபெறும் தாக்குதல்கள் தவிர்க்க முடியாதவை என்ன விலை கொடுத்தேனும் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது" என்று கூறினார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை இத் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்; "நிபந்தனையின்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட அரசாங்கமும் புலிகளும் விருப்பம் தெரிவித்துள்ளன. எனவே மேற்படி தாக்குதல் .பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டிய அவசியத்தை இல்லாமல் செய்து விடவில்லை"

வற்புறுத்தும் முகமாகவே அத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்ற அபிப்பிராயமும் அரசாங்க மட்டங்களில் காணப்படுகின்றது.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு உலக நடைமுறை வழக்கப்படி யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படுவது அவசியம். யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், வடபகுதிக்கு மின்சாரம் வழங்குதல், போக்குவரத்தைச் சீர் செய்தல் போன்றனவற்றிற்கு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் அவசியமாகும். அப்போதுதான் பேச்சுவார்த்தை மேசையில் இரண்டாம்தர விடயங்களை பற்றி கதைத்துக் காலம் கடத்தாமல் நேரடியாக அதிகாரப் பரவலாக்கல் பற்றி கதைக்க முடியும்.

அத்துடன் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்வது தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்களில் ஆலோசனைகளை நடத்தி வந்தார். பேச்சுவார்த்தை தொடங்கப்பட முன்னர் அதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வலியுறுத்தியிருந்தார். குறிப்பாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் அவர் மிகவும் அழுத்தமாக இருந்தார்.

ஆனால் கடந்த 19ம் திகதி மன்னார் கடலில் கடற்படை படகொன்று புலிகளினால் தாக்கப்பட்டதை அடுத்து பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் பிரதமரை பிரச்சினைக்குட்படுத்தின. அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளக்கூடாது என்று பாதுகாப்பு அதிகாரிகளில் சிலர் கேட்டுக் கொண்டனர்.

இவ்வரசாங்கம் பொருளாதாரத் தடையை நீக்கிய பின்னர், மன்னார்க் கடலில் இடம்பெற்ற புலிகளின் தாக்குதல் மட்டுமே இடம் பெற்றதாக பாதுகாப்பு அதிகாரிகளும், சில பத்திரிகைகளும் எடுத்துக் காட்ட முற்பட்டன. ஆனால், நிலைமை அவ்வாறில்லை. யாழ்ப்பாணத்தில் மாதகல் பகுதியில் இராணுவத்தினரின் 'ஷெல்'அடிகள் இடம்பெற்றன. பூநகரிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் பெருந்தொகையான புலிகள் இறந்தனர். பலாலி தாக்குதலிலும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டனர். அச்சுவேலியில் இராணுவத்தின் தாக்குதலால் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே ஒரு பக்கம் மட்டும் தாக்குதல்கள் நடைபெறவில்லை; இரு பக்கமும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கடற்படைக் கப்பல் தாக்கப்பட்டதை அடுத்து தகவல் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க பத்திரிகையாளர்களின் [illegible] பேசும்

பிந்திய செய்திகளின் படி யுத்தநிறுத்தத்தை மேற்கொள்வதற்கு சாதக, பாதகமாகவுள்ள சூழ்நிலைகளைப் பற்றி விரிவாக அரசாங்கம் ஆராய்ந்துள்ளதாகவும் யுத்த நிறுத்தத்திற்கு சாதகமான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்கும் எனவும் தெரிய வருகிறது.

அத்துடன் விடுதலைப் புலிகளுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடத்த ஒரு குழுவொன்றை வடக்கிற்கு அனுப்புவதென தீர்மானித்துள்ளதும் தெரிந்ததே.

யுத்த நிறுத்தம், அரசுடனான பேச்சுவார்த்தை போன்றன தொடர்பாக புலிகளின் பல தரப்பினரதும் கருத்துக்களை பிரபாகரன் கேட்டறிந்து வருவதாகவும் அதனால் புலிகள் பேச்சுவார்த்தையில் அக்கறை கொள்ளாமல் இல்லை என்றும் அதனால் ஒரு நம்பிக்கை பிறந்துள்ளதாகவும் கொழும்பில் வெளியாகும் சிங்கள மாற்றுப் பத்திரிகைகள் சில செய்திகளை வெளியிட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க அண்மையில் புலிகளின் முக்கிய தலைவர்களில் 7பேர் புலிகளின் தலைமையினால் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்கள் மீது வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த போதும்கூட அவர்கள் அரசு-புலிகள் பேச்சுவார்த்தையை விரும்பாதிருந்தமை ஒரு காரணமாக இருக்கலாம் என்று கொழும்பில் வதந்திகள் உலாவுகின்றன.

கடற்படை கப்பல் மீதான தாக்குதலுக்கு உரிமைகோரியுள்ள புலிகள் இயக்கத்தினர், தாங்கள் அரசுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைக்கு இடைஞ்சலாக இது அமையாதென நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

புலிகள் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும்படி அரசாங்கத்தின் மீது

**(நமது அரசியல் நிருபர்)**

பேச்சுவார்த்தை மேசையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றியே முக்கியமாக பேசப்பட வேண்டும்.

தற்போது நிலவும் சூழ்நிலையில் யுத்த நிறுத்தம் எந்தளவுக்கு சாத்தியமானது என்பது பற்றி பிரத்தியேகமான அணுகுமுறைகளை மேற்கொள்வது அவசியம். ஏனெனில் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இல்லாத போது நடைபெறும் தாக்குதல்கள் பற்றியே பெரிதாகக் கதைக்கப்படுகின்றது. யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தவுடன் தாக்குதல்கள் இடம்பெற்றால் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறமுடியாது.

எந்த தரப்பிலிருந்தும் ஒருவர் மேற்கொள்ளும் சிறிய நடவடிக்கை யுத்த நிறுத்தத்தை முறியடிக்க போதுமானதாகும். அரசதரப்பிலும் புலிகளின் தரப்பிலும் அதிருப்தியாளர்கள் யுத்த நிறுத்த முறிவிற்கு காரணமாக இருந்து விடலாம் அல்லது தற்செயலாக தவிர்க்க முடியாதவாறு ஏதாவதொரு தாக்குதல் நடைபெற்றால் அதுவும் யுத்த நிறுத்த முறிவிற்கு காரணமாக அமைந்து விடலாம். இறுதியில் அவை பேச்சுவார்த்தைக்கு முட்டுக் கட்டையாக அமையலாம்.

இவ்விடயத்தில் இரண்டு அணுகுமுறைகளில் ஒன்றைக் கடைப்பிடிக்க முடியும்.

ஒன்று, யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது, யுத்த நிறுத்தத்தை முறிக்குமளவில் தாக்குதல்கள் எதுவும் நடைபெற்றாலும் பேச்சுவார்த்தைக்கு பங்கம் ஏற்படாது என்று அரசாங்கமும் புலிகளும் ஏற்கனவே ஒரு புரிந்துணர்விற்கு வருவது அவசியமாகும். அவ்வாறான ஒரு புரிந்துணர்வு இருப்பின் யுத்த நிறுத்தம் முறிக்கப்பட்டாலும் நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துவதற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

→ 12

www.padippakam.com





# பண்டாரநாயக்க சில குறிப்புகள்

(இ. தம்பையா)

'தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்ததனால் தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதற்கு அடித்தளமிட்டார். பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை கிழித்தெறிந்ததனால் தமிழ் மக்கள் - சிங்கள மக்களிடையே இடைவெளியை அதிகரிக்க வழி செய்தார்'. இக் கருத்துத்தான் காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவைப் பற்றி திட்டமிட்டரீதியில் ஸ்தாபிதமாகியுள்ளது. இந்நாட்டின் பெரும்பான்மை இனவாதிகளும், சிறுபான்மை இனவாதிகளும் அவரவர் வசதிக்கேற்ப பண்டாரநாயக்க பற்றிய மேற்படி கருத்தைப் பிரயோகித்து வருகின்றனர்.

தமிழ் இன உரிமை பற்றி மட்டுமே பேசுவோர் ''பண்டாரநாயக்கா தமிழ் மக்களுக்கு மாறாக இருந்தார்'' என்றும், சிங்கள உரிமைகள் பற்றி மட்டுமே பேசுவோர் ''அவர் சிங்கள மக்களுக்கு எதிராக செயற்பட்டார் என்றும், சிங்கள மக்களினதும் பௌத்த பிக்குகளினதும் நிர்ப்பந்தம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந் நாட்டை தமிழர்களிடம் ஒப்படைத்திருப்பார்'' என்றும் பண்டாரநாயக்கா பற்றி ஒரு கருத்துப் படத்தை இந் நாட்டு மக்கள் முன் வைத்துள்ளனர்.

இலங்கையின் பெரும்பான்மை இனத்தவரின் மொழியான சிங்களத்தை இலங்கையின் ஆட்சி மொழியாக்கியமைக்கு ஆதாரமாக அமைந்த சூழ்நிலையை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

தென்னாசிய நாடுகளில் - குறிப்பாக இந்தியாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவரது இளம்பருவம் முதல் அக்கறை கொண்டவராக பண்டாரநாயக்கா இருந்தார். அதன் பாதிப்புகளுக்குட்பட்டவராக இருந்தார்.

ஏகாதிபத்தியத்தின் காலனிகளாகவிருந்த நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்த பிறகும் ஏகாதிபத்திய பிடியிலிருந்து முற்றாக விடுதலை பெற பல நடவடிக்கைகள் தேவையானதாக இருந்தன.

சுதந்திரமடைந்த பிறகும் ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருந்ததை மாற்ற வேண்டிய தேவையினின்றே தேசிய மொழிகளை ஆட்சிமொழியாக்கும் நிகழ்வுகள் நடந்தேறின.

ஹிந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக மாநில மொழிகள் மாநில நிர்வாக மொழிகளாக்கப்பட்டன

இந்த வெளிச்சூழ்நிலை மட்டுமன்றி உள்நாட்டு சூழ்நிலையும் சிங்களத்தை ஆட்சிமொழியாக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தை பண்டாரநாயக்காவுக்கு ஏற்படுத்தியது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதிக்குப் பிறகும் கூட (சுதந்திரமடைந்ததாக கொள்ளப்பட்ட பிறகுகூட) இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆங்கில மொழியிலேயே உரையாற்ற வேண்டியிருந்தது. எழுத்து மூலம் விண்ணப்பித்து சபாநாயகரின் முன்னனுமதியை பெற்ற பின்னர் மொழி பெயர்ப்பு வசதிகளும் செய்யப்பட்ட பிறகே பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிங்கள மொழியில் உரையாற்ற முடிந்தது.

1953ஆம் ஆண்டு செப்டெம்பர் 2ம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் சிங்களத்தில் உரையாற்ற உரிமை வழங்கப்பட வேண்டுமென்ற தனி உறுப்பினர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் மீதும் ஆங்கிலத்திலேயே உரையாற்ற வேண்டும் என்று சபாநாயகர் தீர்ப்பு வழங்கினார். நீண்ட நேர விவாதங்களுக்குப் பின்னர் அப் பிரேரணை மீது சிங்களத்தில் உரையாற்ற அனுமதி வழங்கப்பட்டது.

அப்பிரேரணை நிறைவேற்றப்பட்ட பிறகும் கூடப் பாராளுமன்றத்தில் சிங்களத்தில் உரையாற்ற சபாநாயகரின் முன்னனுமதி பெற வேண்டிய நிலையே நீடித்தது.

இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேச கண்ணோட்டமுள்ள எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க போன்ற ஒரு தேசாபிமானிக்கு சிங்கள மொழியை இலங்கையின் ஆட்சிமொழியாக்குவதைத் தவிர வேறுவழி இருந்திருக்க முடியாது.

இந்த அடிப்படையிலேயே 1956ம் ஆண்டு யூன் மாதம் 14ம் திகதி தனிச் சிங்களச் சட்டத்தின் கீழ் சிங்களம் ஆட்சிமொழியாக்கப்பட்டது. அதனை அமுலாக்கும் நடைமுறைகள் பற்றிய 1956ஆம் ஆண்டு 33ம் இலக்க ஆட்சிமொழி நடவடிக்கை சட்டத்தின்படி சகல நிர்வாக விடயங்களும் சிங்களத்திலேயே நடைபெற வேண்டுமென விதிக்கப்பட்டது.

இச் சட்டம் நடைமுறைக்கு வந்தது முதல் 3 வருட காலத்தில் அரசாங்க சேவையிலுள்ள தமிழர்கள் யாவரும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என விதித்தது. அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுமிடத்து அவர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படும் என்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறாத தமிழர்கள் பதவியிறக்கம் செய்யப்படுவர் என்றும் விதிக்கப்பட்டது.

இச் சட்டத்தின் படி தமிழ் அரச ஊழியர்கள் மீது விதிக்கப்பட்ட கடப்பாடு பிழையானது என்று 'கோடீஸ்வரன்' என்ற வழக்கில் இலங்கை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இத் தீர்ப்பினை அடுத்து மேற்படி சட்டத்தினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்தது எனலாம்.

தனிச் சிங்களச் சட்டத்தினால் இந் நாட்டின் இன்னொரு இனச் சமூகமான தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஏற்றுக் கொண்ட பண்டாரநாயக்க அப் பாதிப்புகளை போக்குவதில் அக்கறை செலுத்தினார்.

1957ஆம் ஆண்டு யூலை 26ம் திகதி தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்தார். அவ்வுடன்பாடு இலங்கை தமிழர்களுக்கு மொழியுரிமை உட்பட பல உரிமைகளை வழங்கும் பிரதேச சுயாட்சித் திட்டத்தை கொண்டிருந்தது. பிரசித்தி பெற்ற அந்த பண்டா-செல்வா ஒப்பந்தம் பலவிதமான இடைஞ்சல்களினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனினும் அதன் அடிப்படையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் நிர்வாக அலுவல்கள் தமிழ் மொழியில் மேற்கொள்ளப்பட வழிவகுத்த தமிழ் மொழிகள் விசேட ஏற்பாடுகள் சட்டம் 1958ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது. 1966ஆம் ஆண்டு முதல்தான் சகல மட்டங்களிலும் நடைமுறைக்கு வந்ததெனினும் தமிழ்மொழிக்கு வடக்கு கிழக்கில் நிர்வாக மொழி அந்தஸ்தை 1958ஆம் ஆண்டு 28ஆம் இலக்க சட்டமே வழங்கியது.

இலங்கையில் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்திற்கு 1987இல் செய்யப்பட்ட 13வது திருத்தமோ, மாகாண சபைகள் சட்டமோ, தமிழ் மொழி அமுலாக்கல் சட்டமோ தமிழ் மொழியையும் ஆட்சிமொழியாக்கினாலும் 1958ம் ஆண்டின் தமிழ் மொழிகள் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் அடிப்படையை மாற்றியதாகத் தெரியவில்லை. அதாவது கூடிய அந்தஸ்து எதனையும் வழங்கவில்லை. நடைமுறையில் வடக்கு கிழக்கின் நிர்வாக மொழியாக மட்டுமே தற்போதும் தமிழ் பியோகிக்கப்படுகிறது எனலாம்.

ஏகாதிபத்திய பிடியிலிருந்து விடுபட நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். அவை பற்றி 1920களிலேயே அவர் முன்னுணர்ந்தார். இலங்கையில் வாழும் சமூகங்களிடையே இருந்த இடைவெளியை குறுக்க நடவடிக்கை எடுக்கப்படாதுவிடின் அந்த இடைவெளி அதிகரிக்கும். அதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தும் என்று அவர் எண்ணினார்.

இலங்கை வாழ் சமூகங்களுக்கிடையே இருந்த இடைவெளியைக் குறைக்க இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதனை 1924ம் ஆண்டிலேயே அன்றைய இலங்கையின் அரசு கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றார். இதனாலேயே இலங்கையின் அதிகாரப் பரவலாக்கலின் தந்தையென்று அழைக்கப்படுகிறார்.

சமஷ்டி ஆட்சி பற்றிய அந்தக் கோரிக்கைக்கு பிரிட்டிஷார் செவிமடுக்கவில்லை. 1948இற்குப் பிறகும் இலங்கையில் வேகமாக வளர்ந்து வந்த சிங்களத் தேசியவாதத்தின் தாக்கத்தினால் சமஷ்டி ஆட்சி பற்றிய அக்கறை நேர்மையாக அணுகப்படவில்லை.

சமஷ்டி பற்றி வெளிப்படையாக எடுத்துக் கூறப்படாவிட்டாலும் சமஷ்டி அமைப்பை அடிப்படையாகக் கொண்டே 1957ஆம் ஆண்டு பண்டா -செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. சிங்கள அரசியற் தரப்பினரதும், தமிழ் அரசியற் தரப்பினரதும் தூரநோக்கற்ற அரசியல் நடவடிக்கைகளாலும் அவற்றை மீறி செயற்படமுடியாதவாறு பலவீனமாக அரசாங்கம் இருந்தமையினாலும் அவ்வொப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அன்றைய தமிழ் அரசியற் தலைமையின் தமிழ் 'ஸ்ரீ' எழுத்து போராட்டமும், அதன் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரமும் ஒருபக்கமாகவும், சிங்களப் பேரினவாதிகளினதும், பௌத்த பிக்குகளினதும் தொடர்ச்சியான போராட்டங்களும் மறுபுறமாகவும் பண்டாரநாயக்காவை நிலை குலையச் செய்தன. நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இயல்பாகவே பண்டாரநாயக்காவிடமிருந்த பலவீனத்தாலும் அதாவது எதிர்ப்புகளை மேவி அல்லது தந்திரோபாயமாக அவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி காண முடியவில்லை. அதனால் ஒருதலைப்பட்சமாக அவ்வொப்பந்தத்தை வாபஸ் பெறுவதாக பண்டாரநாயக்கா அறிவித்தார்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் தமிழ்மொழி சிறுபான்மையினரின் ஆட்சிமொழியாக, வடக்கு, கிழக்கு பகுதியின் ஆட்சிமொழியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணம் ஒரு பிரதேச சபையாகவும், சிழக்கு மாகாணம் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபைகளாகவும் அவற்றின் விருப்புக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபைகள் ஒன்றிணைந்து இயங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுருங்கக் கூறின் வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேச சுயாட்சிக்கான வழி செய்யப்பட்டிருந்தது எனலாம்.

அப் பிரதேச சபை அதன் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெறும் குடியேற்றங்களுக்கு பொறுப்பானதாகவும், அப்பிரதேச பாதுகாப்புக்கும் பொறுப்புடையதாகவும் இயங்க வழி செய்யப்பட்டிருந்தது.

இலங்கை வாழ் இந்தியர்களை விதேசிகளாகப் பார்க்கும் நிலைப்பாட்டையே பண்டாரநாயக்கா கொண்டிருந்தார். பிரிட்டிஷாரினால் இங்கு கொண்டு வரப்பட்ட அவர்களை பராமரிப்பது தேசிய அரசாங்கத்திற்கு பெரிய தலையிடி என்ற எண்ணம் அவரிடம் வேரூன்றி இருந்தது. அதாவது பிரிட்டிஷார் இந்தியர்களை இங்கு கொண்டு வந்த காலத்திலிருந்து அவர்களுக்கு எதிரான உணர்வு சிங்கள மக்களிடையேயும் சிங்கள அரசியலிலும் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வந்தது. இந்த பாதிப்புகளிலிருந்து பண்டாரநாயக்கா விடுபட்டவராக இருக்கவில்லை.

எனினும் 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்த உடன்பாட்டுடன், இலங்கை வாழ் இந்தியர்கள் அனைவருக்கும் பிரசாவுரிமை வழங்கவும் தமிழரசுக் கட்சியுடன் பண்டாரநாயக்கா உடன்பட்டிருந்தார்; வாக்குறுதி அளித்திருந்தார் என்பது பகிரங்கமானதே.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்பட்டிந்தால் 'பல்லினங்கள் வாழும் இலங்கைத் தேசியம் என்று எல்லா இனத்தவர்களும் பெருமையுடன் அழைத்துக் கொள்ளும் நிலைமை ஸ்தாபிதமாகியிருந்திருக்கும். இன்று இலங்கையில் இலங்கையர் என்ற பொது தேசிய உணர்வின்றி சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர் போன்ற

→ 11

படிப்பகம்

www.padippakam.com



# போக்குவரத்துத் தடைகள் நீக்கப்படாவிடின் பொருளாதாரத்தடை நீக்கத்தால் பயனில்லை!

(எஸ். ஜெயரட்ணம்)

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இது 'பட பஸ்' இதை விட்டால் எமக்கு இன்னொரு பஸ் கிடைக்கப்போவதில்லை என்று யாழ்ப்பாணம் தெல்லிப்பளையிலிருந்து கொழும்புக்கு வந்த கணபதிப்பிள்ளை என்ற விவசாயி தெரிவித்தார். ('பட பஸ்' என்பது யாழ்ப்பாண வழக்குப்படி கடைசி பஸ். அதாவது இரவு நேர சினிமா படக்காட்சி முடிந்த பிறகு இருக்கும் பஸ். அதுவே கடைசி பஸ் ஆகும்)

பொருளாதாரத் தடை நீக்கம் பற்றி பற்றி புதிய பூமியின் பத்திரிகையாளர் அவரிடம் கேட்ட போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

பொருளாதாரத்தடை நீக்கத்தால் யாழ். மாவட்டத்தில் பொருட்கள் கொழும்பு விலைக்கு விற்கப்படவில்லை. பொருளாதாரத் தடை நீக்கத்திற்கு பிறகு விற்கப்பட்ட விலைக்கும் பாரிய வேறுபாடு கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

சில பொருட்கள் கொழும்பு விலையை விடச் சிறிதளவே கூடிக் காணப்படுவதாக கேட்கப்பட்டபோது காங்கேசன்துறையிலிருந்து வந்த ராஜேஸ்வரி என்ற ஆசிரியை பொருளாதாரத் தடை நீக்க அறிவிப்புக்கு பின்னர் பல பொருட்கள் யாழ்ப்பாணக் கடைகளில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழியேற்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து அதிகளவு பொருட்கள் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டதனாலன்றி ஏற்கனவே யாழ். வர்த்தகர்கள் சேகரித்து வைத்திருந்தவற்றை விற்பனைக்கு இட்டுள்ளனர். அதாவது பொருட்தடை நீக்கத்தினால் எதிர்காலத்தில் நிறையப் பொருட்கள் வந்து சேர்ந்தால் பதுக்கி வைத்திருந்தவர்கள் பெருமளவு நட்டத்தை சந்திக்க வேண்டிவரும் என்று பயந்தே பொருட்களை விற்பனைக்கிட்டுள்ளனர்.

அவ்வாறு பதுக்கி வைக்கப்பட்ட பொருட்களை விற்பனைக் கிட்டதனால் தான் பொருட்களின் விலைகள் முன்பிருந்ததைவிட குறைந்துள்ளனவேயன்றி பொருட்கள் அங்கு பெருமளவில் அனுப்பப்பட்டுள்ளன என்று அர்த்தமாகாது என்று தெரிவித்தார்.

பொருளாதாரத் தடை நீக்கத்தினை அடுத்து தாராளமாக யாழ்ப்பாணத்தில் பொருட்கள் கிடைக்காமைக்குக் காரணம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போக்குவரத்து சீரில்லாமையே ஆகும் என்று சாவகச்சேரியைச் சேர்ந்த அரசாங்க ஊழியரான ராஜரட்ணம் என்பவர் தெரிவித்தார். அரசாங்கம் கப்பல்களில் மட்டுமே பொருட்களை அனுப்ப முடியும். வேறு மார்க்கமில்லாதபடியால் கடல்மார்க்கமாகவே பொருட்கள் அனுப்பப்பட முடியும். தொடர்ந்து கப்பல்களில் பொருட்கள் யாழ்ப்பாணத்தில் கிடைக்க வழியேற்பட்டால், பொருட்களின் விலை குறையும் என்று பிரதியமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில் அடிக்கடி பொருட்களை பெருமளவில் பருத்தித்துறைக்கு அனுப்பிவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. கப்பலில் அனுப்பி வைப்பதனால் மட்டும் யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான பொருட்கள் யாவும் கிடைக்க முடியாது. சாதாரணமாக கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பிரயாணிகள் தங்களது கைகளில் எடுத்துச் செல்ல வழியேற்பட வேண்டும். தனியார் வர்த்தகர்களும் பொருட்களைக் கொண்டு செல்ல வாய்ப்பேற்பட வேண்டும். அப்போதே பொருட்கள் தாராளமாகக் கிடைக்கும் என்று கொழும்பு வாழ் பொ.ஜ.ஐ.முன்னணியின் தமிழ்த் தலைவர்களில் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: "யாழ்ப்பாணத்துக்கு மக்கள் போய்வர பாதுகாப்பான வழியேதும் இல்லை என்பதை அறியாதோர் இல்லை. ஆனையிறவுப் பாதையில் செல்ல முடியாது அது மூடப்பட்டுள்ளது. அப்பாதையில் இலங்கை இராணுவத்தினராலும், புலிகளாலும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றி யாழ் - கொழும்பு போக்குவரத்தை உடனே சீர் செய்ய முடியாது.

வவுனியாவில் புளொட் செக்பொயின்டிற்கு அங்கால் ஆபத்தான் பிரயாணத்தையே மக்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்விடத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்றடையும் வரை ஆபத்தை எதிர்நோக்கியே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது.

சிளாலி படகுப் பயணத்தைக் கூட சட்டவிரோதமானதாகவே முன்னைய அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. அப்பகுதியில் இரவிலேயே புலிகளின் ஏற்பாட்டில் படகுச்சேவை நடத்தப்படுகின்றது. அப்பகுதியில் விமான, கடற்படையினரின் தாக்குதல்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன.

அந்த ஆபத்தை ஏற்ற நிலையிலேயே கொழும்பிலிருந்து மக்கள் யாழ்ப்பாணம் செல்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் கொழும்புக்கு வருகின்றனர். சங்குப்பிட்டி பாதையும் மூடப்பட்டுள்ளதால் கிளாலில் பாதையில் மட்டுமே, சட்ட விரோதமானதாக பிரகடனப்படுத்தப் பட்டிருப்பினும் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. கொழும்பிலிருந்து பொருட்களும் அவ்வழியே கொண்டு செல்லப்படுகின்றன.

பொருளாதாரத்தடை நீக்கப்பட்ட பிறகும் கூட அந்தப் பாதையிலேயே பொருட்கள் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது.

எனவே போக்குவரத்து சீராக்கப்படாவிட்டால் பொருளாதாரத் தடை நீக்கத்தின் பலனை வடபகுதி மக்கள் அவுபவிக்க முடியாது" எனவும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து கஸ்டங்களினால் பொருளாதாரத்தடை நீக்கம் அர்த்தமற்றதாகவே இருப்பதாக கொழும்பில் இருக்கும் பொது ஜக்கிய முன்னணி தமிழ் அங்கத்தினர்கள், பொ.ஜ.ஐ.முன்னணிக்கு ஆதரவான கட்சியினர், தனிப்பட்ட ஆதரவாளர்கள் என்போரை உள்ளடக்கிய குழுவொன்று பிரதமர் உட்பட அரசாங்கத்தின் பல அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றது.

அக் குழுவினால் திரட்டப்பட்ட விபரங்களின்படி கொழும்பிலிருந்து கிளாலிப்பாதையினூடாக ஒரு லொறியில் பொருட்கள் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட ஒரு லட்சத்து 50 ஆயிரம் செலவாகிறதாகத் தெரிய வருகிறது. அத்துடன் பொருட்கள் யாழ்ப்பாணம் சென்றடைய ஒன்றரை மாத காலம் தாமதம் ஏற்படுவதாகவும் அக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொருட்களைக் கொண்டு செல்ல ஈற்படும் செலவுகளும் அப்பொருட்களின் விலையாக மக்கள் மீது சுமத்தப்படுகின்றன.

அக்குழு அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த யாழ் போக்குவரத்துச் சுணக்கம், செலவுகள்

→ 11

## பொருளாதாரத் தடை நீக்கப்பட முன்பும், நீக்கப்பட்ட பின்பும் வடக்கில் பொருட்களின் விலைகள்

| பொருட்கள் | நிறை/ எண்ணிக்கை | நீக்கத்திற்கு முன்பு விலை | நீக்கத்திற்கு பின்பு விலை |
|---|---|---|---|
| சிவப்பு அரிசி | 1கிலோ | 29/50 | 29/50 |
| குத்தரிசி | 1 கிலோ | 29/50 | 29/50 |
| சீனி | 1 கிலோ | 35/= | 34/= |
| கோதுமை மா | 1 கிலோ | 14/50 | 10/= - 13/= |
| மண்ணெண்ணெய் | 1லீ | 35/= | 25/= |
| சவர்க்காரம்-சன்லைட் | 1 கட்டி | 9/50 | 8/50 |
| -லக்ஸ் | 1 கட்டி | 10/= | 9/= |
| மைசூர் பருப்பு | 1 கிலோ | 30/= | 26/= |
| பாண் | 1றா | 8/= | 5/= |
| பச்சை அரிசி | 1 கிலோ | 13/= | 12/50 |
| பெனடோல் | 1 காா்ட் | 12/50 | 10/= |
| சிமேந்து | 50 கிலோ | 7000/= (உச்சவிலை) | 950/= |
| சிமேந்து | 50 கிலோ | 3000/= | 950/= |
| எஞ்சின் எண்ணெய் | 1லீ (உச்சவிலை) | 900/= | 130/= |
| எஞ்சின் எண்ணெய் | 5 லீ | 800/= | 650/= |

குறிப்பு: போக்குவரத்துச் செலவு அதிகமாகையால் மருந்துகளும், அத்தியாவசிய பொருட்களும் வழமையை விட 50 தொடக்கம் 75 சதவீதம் அதிகரிக்கப்பட்ட விலைகளிலேயே விற்கப்படுகின்றன.

## போக்குவரத்து காலதாமதமும் மிகைச்செலவும்

| தொடக்கம் | முடிவு | ஊடகம் | நேரம் | செலவு | தூரம் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு கோட்டை | வவுனியா | ரயில் | 9 மணி | 55/= | |
| வவுனியா ரயில் நிலையம் | வவுனியா இராணுவ பரிசோதனை இடம் | பஸ் | 30 நிமி | 8/= | |
| வவுனியா-(இ.ப.இடம்) | தாண்டிக்குளம் புளொட் பரிசோதனை | நடை | 30 நிமி | - | 1மைல் |
| தாண்டிக்குளம் (பு.ப.இடம்) | எல்.ரீ.ரீ.ஈ பரிசோதனை இடம் | வான் | 1 ம.30 நி | 100/= | |
| எல்.ரீ.ரீ.ஈ. (ப.இ.) | ஓமந்தை பஸ் நிலையம் | நடை | 30 நிமி | | 1/2 மைல் |
| ஓமந்தை பஸ்நிலையம் | ஆலங்கேணி | வான்(VAN) | 3 ம.30 நிமி | 350/= | |
| ஆலங்கேணி | ஆலங்கேணி படகுதுறை | டிரக்டர் | 15 நிமி | 50/= | |
| ஆலங்கேணி (ப.து) | கிளாலி | படகு | 3ம. 30 நிமி | 250/= | |
| கிளாலி | யாழ். பஸ் நிலையம் | வான்(VAN) | 2ம. 30 நிமி | 150/= | |

★ போக்குவரத்து ஒவ்வொருநாளும், குறிப்பிட்ட நேரத்திற்கும் இல்லாவிட்டால் தங்குமிட, மேலதிக உணவு செலவுகளையும் பிரயாணிகள் சுமக்க வேண்டிவரும்.

## ஒரு லொறி பொருட்கள் யாழ்ப்பாணம் போய்ச்சேர செலவு ரூ.125,000/= முதல் 150,000/=

| | |
|---|---|
| கொழும்பு - கிளாலி | 70,000/= - 90,000/= |
| கிளாலி படகு செலவு | 35000/= - 45000/= |
| கிளாலி - யாழ் நகரம் | 12,500/= - 15,000/= |
| வவுனியா இராணுவ பரிசோதனை இடத்தில் பொருட்களை ஏற்றி இறக்க செலவு | 3000/= |
| வவுனியா புளொட் பரிசோதனை இடம் | 10,000/= |
| கிளாலி கரையில் எல்.ரீ.ரீ.ஈ. பரிசோதனை இடம் | 2500/= |

★ ஒரு லொறி பொருட்கள் யாழ் சென்றடைய 1 முதல் 1 1/2 மாதகாலம் எடுக்கிறது.
★ வவுனியா இராணுவ பரிசோதனை இடத்தில் பொருட்களை இறக்கி ஏற்ற 7 முதல் 14 நாட்கள் எடுக்கின்றன.
★ கிளாலி படகு சேவை இராணுவத்தால் தடைசெய்யப்பட்டுள்ளதால் இரவு நேரங்களில் மட்டுமே படகு சேவை நடைபெறுகிறது. படகுப் பிரயாணம் உயிர்களுக்கு மட்டுமன்றி பொருட்களுக்கும் ஆபத்தானதே.

படிப்பகம்

www.padippakam.com



# லயம்

## கைலாசபதியை மறந்து யாழ்ப்பாண இலக்கிய ஆய்வா?

பெண் விடுதலையாளர்கள், பகுத்தறிவுவாதிகள் (நாஸ்திரிகள்), தேசியவாதிகள் ஆகியோரை மாக்ஸியவாதிகள் என்று அழைப்பதில் தவறேதும் இருக்கமுடியாது என்று என். சண்முகரட்னம் என்பவர் 'யாழ்ப்பாண சமூகம் ஒரு பன்முக ஆய்வு' என்ற தலைப்பில் கொழும்பில் கடந்த 19ஆந் திகதி நடைபெற்ற முழுநாள் கருத்தரங்கின் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசும் போது குறிப்பிட்டார்.

அத்துடன் லெனின் மாக்ஸியன் தத்துவத்திற்கிணங்க நடக்காமல் மாக்ஸ் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படைகளை தகர்த்தார் என்றும் ஒரு 'புதிய கண்டுபிடிப்பையும்' தெரிவித்தார்.

மாக்ஸின் அடிப்படைகளை தகர்த்து லெனினை மாக்ஸியவாதியென்று ஏற்றுக் கொள்ள முடியுமெனின், கிழக்கிலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளரும் பெண்விடுதலையாளருமான சித்திரலேகா மௌனகுருவை ஏன் மாக்ஸியவாதி என்று ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் ஒரு 'சுவையான' ஒப்பீட்டைச் செய்தார் அவர்.

யாழ் தமிழ் மக்களின் மத்தியில் இருந்த இடதுசாரிகளை மரபு மாக்ஸியவாதிகள் என்றும் அவர்கள் இலக்கியத்தில் அப்பாவித்தனமான யதார்த்தத்தை வேண்டி நின்றார்கள் என்றும் சித்திரலேகா மௌகுரு குறிப்பிட்டதற்கு பதிலளிக்கும் வகையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ந. ரவீந்திரன் பேசிய கருத்துக்களுக்குப் பதிலளிகும் வகையிலேயே என். சண்முகரட்னம் மேற்படி குறிப்பிட்டார்.

''மாக்ஸிய வாதிகளில் மரபு மாக்ஸிய வாதிகள் நவமாக்கிய வாதிகள் என்று இரண்டு பிரிவினர் இல்லை. அந்தோனியோ கிராம்சி மாக்ஸியத்தை இத்தாலி தேசத்திற்கு ஏற்ப வளர்த்தெடுத்தார். அவருடன் அல் தாசரை ஒப்பிட முடியாது. அவர் மாக்ஸிய பதங்களை பாவிக்கும் ஒரு மொழியியலாளர் மட்டுமே. மாக்ஸியத்தை சீன தேசத்திற்கு ஏற்ப வளர்த்தெடுத்தார் மாவோ. 'மாக்ஸியம்' என்பது அடிப்படை மாக்ஸியத் தத்துவத்தில் எல்லாப் பிரச்னைகளுக்கும் பதில் கூறப்பட்டிருக்க வில்லை. அதன் அடிப்படையில் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப தீர்வுகள் காணப்பட முடியும். மாக்ஸியம் என்பது பொருள்முதல் வாதத்தையும் , இயங்கியலையும் கொண்டது. அவற்றைத் தகர்த்து விட்டு மாக்ஸியத்தை பிரயோகிப்பதாக கூறுவது சுத்தப் பொய்யாகும்.

இடதுசாரி இலக்கியவாதிகளை மரபு மாக்ஸியவாதிகள் என்று இப்போது சித்திரலேகா கூறுகிறார் அப்படியென்றால் அவரும் ஒரு காலத்தில் மரபு மாக்ஸியவாதியே. ஏனெனில் அவ்வேளை அவரும் அந்த இடதுசாரி இலக்கியங்களை ஏற்றுக் கொண்டவர். இலக்கியத்தில் யதார்த்தம் இருப்து அப்பாவித்தனம் என்று குறிப்பிடுவதையும் ஏற்க முடியாது'' என்று குறிப்பிட்டார் இரவீந்திரன்.

அவர் அவருக்கு உரிய உணர்ச்சி வசப்பட்ட கோபாவேசத்துடன் பேசினார் என்பதை தவிர அவரது கருத்துக்களில் குறை ஏதும் கூறமுடியாது.

அவருக்கு பதிலளித்துப் பேச வந்த சண்முகரட்னம் இரவீந்திரன் மாக்ஸியத்திற்கு வக்காளத்து வாங்கினார். என்று பேச்சை ஆரம்பித்து சித்திரலேகாவிற்கும் அவரது பெண்ணிலை வாதத்திற்கும் வக்காளத்து வாங்கினார். சித்திரலேகாவின் கணவருக்கு அருகில் அமர்ந்திருந்த அவர் உணர்ச்சி வசப்பட்டவராக மேடைக்குச் சென்று அவரது கருத்துக்களை முன்வைத்தார்.

இவர் ஈ.வே.ரா போன்ற பகுத்தறிவாளர்களையும், பெண்விடுதலை பற்றி பேசுவோரையும், தேசியவாதிகளையும் மாக்ஸிச வாதிகள் என்று அழைக்க வேண்டுமென்று கூறினார்.

அவர் அப்படி கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் அவர்தான் தினகரன் பத்திரிகைக்கு 'பண்டாரநாயக் காயிஸம்' என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்த போது 1970-77 காலகட்டத்தில் அக்கட்டுரையை எழுதியிருந்தார். யாழ். பல்கலைக்கழகத்திலிருந்த போது மாக்ஸிய மாவோவாதியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்ட அவர் மேற்படி கட்டுரையில் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவை மாக்ஸிஸ்ட்டுக்களை விட உயர்ந்த இடத்தில் வைத்து அவரின் கொள்கைகளை 'பண்டாரநாயக்காயிஸம்' என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

வடக்கில் இருந்த ஒரு தமிழின விடுதலைப் போராட்டக் குழுவாக அடையாளம் காட்டப்பட்ட என்.எல்.எப்.ரி அமைப்புக்கு ஒரு கொள்கை வகுக்கும் புத்திஜீவியாக இருந்தார். என்.எல்.எப்.ரிக்கு மட்டுமன்றி தமிழ் இன விடுதலைப் போராட்டத்திற்கும் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் என்.எல்.எப்.ரீயை மட்டுமன்றி, 'தமிழ் தாயகத்தை' மட்டுமன்றி நாட்டையே விட்டு ஐரோப்பிய நாடொன்றுக்கு ஓடியவராவார்.

அங்கு சென்று அரசியல் புகலிடம் பெற்று பல மேற்படிப்புகளையும் மேற்கொண்டார். இப்போது சந்திரிகா அரசாங்கத்தில் மீண்டும் 'பண்டாரநாயக்காயிஸ'த்திற்கு மவுசு இருக்குமென்று எண்ணி இலங்கைக்கு வந்தாரோ தெரியாது. தற்போது இலங்கைக்கு வந்துள்ளார்.

எனவே அவர் மாக்ஸியத்தின் அடிப்படைகளை தகர்க்கும் பெண்விடுதலையாளர்கள், பகுத்திறிவாளர்கள், (சில வேளை சமஷ்டிக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, யூ.என்.பி என்பவற்றின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் கூட) என்போரை மாக்ஸியவாதிகள் என்று அழைக்க வேண்டுமென்று கூறினால் அதுபற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அவர்களை மாக்ஸியவாதிகள் என்று அழைக்க முடியாது என்பதை யாவரும் அறிவர்.

அவ்வாறிருக்க அன்றைய கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய இ. தம்பையா (அவர் மாக்ஸியவாதியென்று நான் நம்புகிறேன்) பகுத்திறிவாளர்களை மாக்ஸிஸ்டுகள் என்று அழைக்க முடியுமென்றால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஈ.வே.ராவின் தலைமையின் கீழ் அணிதிரண்டிருப்பார்களே! எனவே பகுத்தறிவாளர்கள் பெண்விடுதலையாளர்கள், தேசியவாதிகள் ஆகியோரை மாக்ஸியவாதிகள் என்று அழைக்க முடியுமா என்பது எனக்கு சந்தேகம் இருக்கிறது. அதைப்பற்றி ஆய்வு செய்து பார்ப்பது நல்லது'' என்று அவர்களின் விவாதம் முடிவடைந்த பின்னர் குறிப்பிட்டது கவலைக்குரியது.

ஏனெனில் அதில் ஆய்வு செய்வதற்கு ஒன்றுமில்லை. தனியே பெண்விடுதலை நிலைப்பாட்டை கொண்டவர்கள், பகுத்தறிவாளர்கள், தேசியவாதிகள் என்போர் ஒரு போதும் மாக்ஸியவாதிகள் ஆகமாட்டார்கள். அவர்கள் தம்மைத்தாமே மாக்ஸியவாதிகள் என்று கூறிக்கொள்வது மாக்ஸிய அடிப்படையில் மனித சமூகம் பெறவுள்ள விடுதலைக்கு மாறாக செயற்படுவதற்கே ஆகும்.

எனவே சண்முகரட்னம், சித்திரலேகா வகையறாக்கள் தங்களைத் தாங்களே மாக்ஸியவாதிகள் என்று அழைத்துக் கொள்வது அழிவுக்கேயன்றி ஆக்கத்திற்கன்று. அந்த வகையறாக்கள் 'தமிழ் தேசியம்' என்ற கொள்கையை ஆதரிப்பதற்காக மேற்கொண்ட 'புத்திஜீவித்தன குளறுபடிகளை' தமிழின விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாவரும் அறிவர். அவர்களை பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை.

இதைத்தவிர 'யாழ்ப்பாண சமூகம் ஒரு பன்முக ஆய்வு' கருத்தரங்கு மிகவும் பிரயோசனமாகவே இருந்தது. ஆனால் யாழ்ப்பாண அரசியல் தலைமைத்துவம் பற்றி பேசிய கலாநிதி அம்பலவாணர் சிவராசா தயாரிப்பின்றிப் பேசினார். எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமைத்துவத்தனையே மேலானதாக காட்ட முற்பட்டார். அவருக்கு மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா நல்ல பதிலை கொடுத்தார். யாழ்ப்பாண இடதுசாரி தலைமைகள் பற்றி ஜீவா எடுத்து விளக்கினார்.

இருப்பினும் யாழ்ப்பாண இலக்கியம் பற்றி பேசவந்த சித்திரலேகா இலக்கியம் பற்றி பேசாது யாழ்ப்பாண பழைய இலக்கியங்களில் பெண்ணடிமை பற்றி மட்டுமே எடுத்துரைத்தார். அவர் இப்போதெல்லாம் இலக்கியம் பற்றி பேசுவதாகக் கூறிக் கொண்டு பெண்விடுதலைப்பற்றிப் பேசுகிறார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பற்றியோ, தேசிய கலை இலக்கியப் பேரவை பற்றியோ பேசாமல் மல்லிகை, தாயகம் அலை போன்ற சஞ்சிகைகள் பற்றியோ பேராசிரியர் கைலாசபதி பற்றியோ பேசாமல் யாழ் இலக்கியம் பற்றி பேச முடியுமா என்பதை நான் யாழ் இலக்கியம் பற்றிப் பேசவந்த சித்திரலேகாவிடம் கேட்க விரும்புகிறேன்.

பேராசிரியர் கைலாசபதி பற்றியே பேசியும் எழுதியும் வளர்ந்தவர்கள் அவர் இறந்ததுடன் அவரை கைவிட்டுவிட்டனர்.

கைலாசபதி இறந்தவுடன் மாக்ஸியம் பற்றியும் பேசுவதையும் நிறுத்திவிட்டனர். மாறாக கைலாசபதிக்கும் மாக்ஸியத்துக்கும் எதிராகவும் பேசுகின்றனர். என்னே புதிய தமிழ் புத்திஜீவித்தனம் என்று வியக்க வைக்கிறது.

**கே. கோபாலகிருஷ்ணன்**

சில வருடங்களின் முன் இலங்கை வந்திருந்த பகீரதன் என்ற தமிழக அறிஞர் 'ஈழத்து சிறுகதை உலகம் தமிழகத்திலிருந்து பத்து வருடங்கள் பின்தங்கியுள்ளது' என்று கூறப்போய் கடுமையான விவாதம் ஒன்று நடந்து முடிந்திருந்தது. எமக்கான ஒரு மண்வாசனை இலக்கியம் பற்றி பிரக்ஞை பூர்வமாகப் புரிந்து கொண்டு எமது வரலாறு தொடரப்பட்டதும் கடந்த காலத்திற்குரியதாகி விட்டது.

அவர் பத்துவருடம் பின் தங்கியிருப்பதாகவே கூறினார். இன்று ஜெயமோகன் என்ற தமிழகப் படைப்பிலக்கியவாதி எம்மிடம் இருப்பனவெல்லாம் வெம்பல்களே என்று அடித்துக்கூறி வருடக்கணக்குக் குறிப்பிட முடியாத அளவுக்குப் பின்தங்கியுள்ளோம் என்று எத்தியெறிந்து விட்டுள்ளார். அவர் விரும்புவது போலவே ஒரு விவாதத்தை வேண்டி நிற்பதால் அவரது கட்டுரையின் பெரும்பகுதியை இங்கு முன்வைத்து நீங்களே விவாதத்தைத் தொடரக்களம் அமைத்துத் தருவதே தனது கடமையென 'லயம்' கருதுகிறது.

இலண்டனிலிருந்து வெளிவரும் 'நாழிகை' சஞ்சிகையின் ஜூலை 1994 இதழில் ''இலங்கைப்படைப்புக்களின் வடிவம்'' என்ற ஜெயமோகனின் கட்டுரை (பக்கங்கள் 31-32) இவ்வாறு தொடங்குகிறது: ''இன்றைய இலங்கைத் தமிழ்ப் படைப்புக்களைப் பொதுவாகப் பார்க்கும் போது அனுபவ உலகின் தீவிரத்தை உள்வாங்கி வெளிப்படுத்த முடியாதபடி மொழியும் வடிவமும் பின்தங்கி விட்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றில் ஒரு வெடிப்பு நிகழாதவரை இலங்கைத் தமிழ் படைப்பிலக்கியம் இன்று உள்

ளது போல,
வற்றால் நி
கும். இதுப
விவாதம் கு
பெயர்ந்தே
வது உடன
டியது அவ

இதேபோல்
கேயே
பல தட
றோம் என்
லாம். ''இ
கதைகளே
நாவல்
லையே,
தனித்த க
லாசபதியி
கோன்மை
லக்கியம்
வறட்டுத்
விட்டது''
டுங்கேட்
ஜெயமோ
தான் வெ
கூறுகிறார்,
அறிஞர்க
ழிலேயே
இல்லை
கூறிவிட்ட
வறண்ட
இருக்கிறே
போய்விட
போதைக்
வெம்பல்
விவாதத்
போம். எ
வெம்பல்
இருப்பது
பாளிகள்
தேவை
பிரக்ஞை
தையே
கூறும் ஜெ
உணர்த்து
கோட்பா
பார்ப்போ
யதார்த்த

கொழும்பிலுள்ள 'தாஜ் சமுத்திரா' ஹோட்டலில் கடந்த மாதம் 4ஆம் திகதி இரவு விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த இரவு விருந்துபசாரத்தில் முக்கிய அம்சமாக பரத நாட்டிய நிகழ்ச்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் விருந்துபசாரமோ, நாட்டிய நிகழ்ச்சியோ குறிப்பிட்டபடி நடைபெறவில்லை. ஏனெனில் அவ்விருந்துபசார நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களான லக்ஷ்மன் ஜயக்கொடி (கலாச்சாரம்) லக்ஷ்மன் கதிர்காமர் (வெளிவிவகாரம்) பௌசி (சுகாதாரம்) தர்மசிறி சேனாநாயக்க (தகவல் ஒலிபரப்பு) ஆகியோர் சமூகம் தரவில்லை. அந்த விருந்துபசார நிகழ்ச்சியின் பின்னணியில் இருந்த அசிங்கங்கள் தெரிந்ததனால் சமூகம் தரவில்லையோ தெரியாது.

இவ்விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருந்தவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் இசைக் கட்டுப்பாட்டாளர் அருந்ததி ஸ்ரீரங்கநாதன். நாட்டிய நிகழ்ச்சி ஒழுங்கு செய்திருந்தார், வாசுகி ஜெகதீஸ்வரன். (இவர் ரூபவாஹினி விஸ்வநாதனின் சகோதரி)

இந்த விருந்துபசார நிகழ்ச்சியின்

பின்னணி
பார்த்தா
ஒரு அ
கேட்கத்

பொ.ஜ.ஐ
கம் பத
சபைகள்,
பதவிகள்
செய்து
சாங்கங்க
வாளர்க
பதும்,
உயர்வு
தெரிந்த

அதன்
கூட்டுத்
வையிலு
செய்யப்
பாளரா
னுக்கு
ளுக்கா
கொடுக்
தமிழ்
விருந்த
ருந்து
கையே
கையே
தெரிவி

படிப்பகம்

www.padippakam.com



படைப்புகளில் மேலோங்கி விட்டிருப்பதை அவர் பார்க்கிறார். இதன் தார்ப்பரியம் பற்றி அலசும் போது ''தமிழகத்தில் எதார்த்த வகை எழுத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. மிகு கற்பனை சார்ந்த புனைகதைகளின் உலகில் மிதக்கும் வாசகலட்சங்களுக்கு அவர்கள் வாழ்வை அவர்களுக்குக் காட்டும் கடமை

# ஒரு தவளைக்குஞ்சும் சில வெம்பல்களும்

அதற்கு உண்டு. இலங்கையில் இன்று படைப்புலகின் முதன்மையான பணி இதுவாக இருக்க முடியாது. இலங்கை மக்கள் முதுகொடிய யதார்த்தத்தைச் சுமப்பவர்கள். வாழ்வின் பௌதீக இயக்கத்தை சித்திரிப்பதன் மூலம் தமிழக யதார்த்தத்தை இலக்கியம் ஒளியே படாமல் இருந்த எத்தனையோ மூலைகள் மீது கவனத்தைக் கொண்டு வந்தது. இத்தகைய விரிவும் பன்முகத்தன்மையும் இலங்கை மண்ணுக்கு இல்லை. தவறான கருவியால் யதார்த்தவாதத்தால் இலங்கை வாழ்வையள்ள படைப்பாளிகள் முயலும் போது திரும்பத்திரும்ப ஒரே மாதிரியான பௌதீக வாழ்வே அகப்படுகிறது. விளைவாக பல படைப்புகள் முதல் சில பக்கங்களிலேயே அலுப்பு தருகின்றன'' என்கிறார் ஜெயமோகன்.

இவை எவ்வளவு தூரம் உண்மையானவை? எமது யதார்த்தத்தின் பிரதிபலிப்பு ஏன் அவசியமில்லை?

அவர் சொல்கிறார்: ''இலங்கைப் படைப்பாளி இன்று தன் முன் கொந்தளிக்கும் வாழ்வை சரித்திரத்தின் முன் வைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. கனவுகள், மதிப்பீடுகள், கருத்து நிலைகள் மூன்றையும் உடைத்து ஆராய வேண்டியுள்ளது. ஒரே சமயம் சிந்தனையும் உள்ளுணர்வும் தீவிரமாக செயல்பட்டாலொழிய இது சாத்தியமில்லை. கருத்து நிலைகளை விவாதிக்கும் தருக்கம் சார்ந்த மொழியும், உள்மன அதிர்வுகளை மீட்டெடுத்து பதிவு செய்யும் பாய்ச்சல் மொழியும் ஒரே சமயம் பயின்று வர வேண்டியுள்ளது. சம்பிரதாயமான யதார்த்தவாதம் இவற்றுக்கு மிக அசௌகரியமான ஒன்று. கருத்து நிலைகளை அதில் விவாதிக்க ஆரம்பிக்கும் போது கட்டுரை உரைத்தன்மை மேலோங்கி அழகியல் ஒழுங்கு சிதைகிறது. ஆழ் மனப் பதிவுகளைத் தொடமுனையும் போது திட்டவட்டமான பௌதீக யதார்த்தத்தில் அதை 'நம்பும்படியாக' பொருத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே யதாதர்த்தவாத மரபின் இறுக்கத்தை மீறுவஃதுதான் அவர்களுக்கு இன்று மிகவும் வசதியாக இருக்கக்கூடும்''.

கருத்து நிலைகளை படைப்பிலக்கியத்தில் ஆராய்வது அவசியமானதுதானா? வாழ்க்கை அனுபவத்தின் உணர்வு வெளிப்பாடாகத்தான் படைப்புகள் இருக்க வேண்டும் என்று தானே இவர் போன்ற தூய கலைக் கோட்பாட்டாளர்கள் வலியுறுத்தி வந்தார்கள்? ஜெயமோகனின் படைப்புக்களில் யதார்த்தத்தை விலகி உள்மன அதிர்வுகளை விவாதமாய்க் கொட்டிய போதெல்லாம் எங்கள் அறிஞர்களுக்கும் உன்னத கலையாகத்தான் தெரிந்தது. அதே பாணியில் கருத்து முதல் வாதத்தை முறியடித்து பொருள் முதல் வாதத்தின் முனைப்பை வெளிப்படுத்தியிருந்தால் கண்டிப்பாகக் கலைந்துவமிழந்த வறட்சியாய் இவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

இதை இங்கே முன்வைக்கும் போது தவிர்க்க முடியாமல் செப்டெம்பர் 19ஆம் திகதி கொழும்பில் விபவி ஏற்பாட்டில் நடந்த 'யாழ்ப்பாண சமூகம் பற்றிய' கருத்தரங்க நிகழ்வு நினைவுக்கு வருகிறது. அங்கே 'பொருளாதார அமைப்பு அடித்தளம், அரசியல் கலாச்சாரம் சட்டம், இலக்கியம் போன்றன மேற்கட்டுமானம் என்ற மார்க்ஸீய கருத்து 'மரபு மார்க்ஸியர்களால்' வறட்டுத்தனமாகப் பிரயோகிக்கப்பட்டது, பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அதற்கு பதில் கூறிய ஒரு நண்பர், 'இதை மீள வலியுறுத்திய மாஓசேதுங் இத்தகைய பொருள் முதல்வாத கண்ணோட்டத்துடன் நாம் நின்று விடுவதில்லை. இந்த மேற்கட்டுமானம் அடித்தளம் மீது தம்மளவில் தாக்கத்தை நிகழ்த்தும் என்ற இயங்கியல் அணுகுமுறையையும் உடையவர்கள்' என்று கூறியதை வலியுறுத்தியிருந்தார்.

இக்கருத்தை மறுதலிக்கவந்த சண்முகரத்தினம் (சமுத்திரன்) 'இது மாக்ஸியத்தின் அடிப்படையே இல்லை மாக்ஸ் போகிற போக்கில் சொல்லிய ஒன்று, இன்று தவறாக வலியுறுத்தப்படுகிறது' எனக்கூறி அமர்ந்தார்.

இதைத் தவறாக வலியுறுத்தி, இயங்கியல் பொருள் முதல்வாத நோக்கின் முழுமையான அணுகுமுறையில்லாமல் கலை இலக்கியங்களை விமர்சித்த வறட்டு மாக்களிஸ்டாக முன்னர் அறியப்பட்ட அதே சமுத்திரன் தான் இவர். இவர் போன்ற சிலரால் மாக்ஸிய நோக்கு கொச்சைப்படுத்தப்படத்தக்க சூழல் இருப்பது மெய்தான். இவர்கள் ஒரு காலத்தில் வறட்டு மாக்ஸியர்களாக இருந்து, இன்று மாக்ஸியத்தின் அடிப்படைகளையே மறுதலிக்கும் சந்தர்ப்பவாதிகள் ஆகிவிட்டவர்கள். இத்தகையவர்களின் 'மரபு மாக்ஸிய நோக்கு' விமர்சிக்கப்பட வேண்டியது தான்.

இதை வைத்து மாக்ஸிய நோக்கையே நிராகரிக்க முனைவது அறியாமையின் வெளிப்பாடே. மாக்ஸியத்தைப் பின்பற்றுபவர்களே மாக்ஸிஸ்டுகளாயிருக்கமுடியும். இதில் 'மரபு மாக்ஸியர்' 'புதிய மாக்ஸியர்' என்ற வேறுபாடுகள் எதுவும் இருக்க முடியாது. இந்த அடிப்படைகளை மனங்கொண்டே ஜெயமோகன் கருத்துகள் மீது எமது விமர்சனத்தை முன்வைக்கமுடியும். தவிர,இந்த விவாதம் மாக்ஸிய அணிக்குரிய ஒன்று அல்ல என்ற வகையில் அனைத்து ஈழப்படைப்பாளிகளும் இந்த விவாதத்தில் பங்கு கொள்வது தவிர்க்கவியலாததாகும்.

விவாதத்துக்கான அடித்தளத்தை அமைப்பதற்கு அமைவாக ஜெயமோகன் கருத்தை அறிமுகப்படுத்துவது என்ற குறிக்கோளிலிருந்து விலகாது மீண்டும் அவரிடமே வருவோம். ''இன்னொரு வகையிலும் யதார்த்த வாதம் தடையாக ஆகக்கூடும். இன்றைய இலங்கைத்தமிழ் வாழ்வின் கொந்தளிப்பான நிலை நேரடியாக படைப்பாளியைப் பாதித்து தன் சார்பான ஒரு தீவிர நிலைக்குத் தள்ளி விடுகிறது. இந்தச் சார்பு அத்தருணத்தின் கருமத்துடன் சம்பந்தப்பட்ட அளவிலேயே நின்றுவிடச் செய்கிறது. கலைப்படைப்புக்கு வாழ்வுடன் எவ்வளவு ஒட்டுதல் தேவையோ அதே அளவு தூரமும் தேவை... நவீன படைப்புகளில் நிகழ்தளத்தை நிராகரிப்பது மூலம் இந்த தூரத்தை சாதிக்க முடியும். யதார்த்த வாதம் இதற்கு தடையாகும்'' எனக்கூறும் ஜெயமோகன் ''நிகழ்வுகளின் அனுபவ சாரத்தை அதாவது அவற்றின் நனவிலி மனப்பதிவுகளை மட்டும் இந்தப் பின்புலத்துடன் இணைப்பது வழியாக அர்த்த விரிவும் தீவிரமும் கொண்ட படைப்புகளை உருவாக்க முடியும்'' என வழிகாட்டவும் செய்கிறார்.

''இந்தியாடுடே'' இலங்கைச் சிறப்பிதழின் உமா வரதராசனுடைய சிறுகதை பற்றிக் கூறும் போது ''உமா வரதராசனின் கதை அதற்கான முயற்சி. ஆனால் இதில் உள்ள படிமங்கள் திட்டவட்டமான கலாச்சார அடையாளம் இல்லாதவை. எனவே பல்வேறு தளங்களை நோக்கி இக்கதை விரிவுபெறவில்லை. குறிப்புணர்த்தும் பொருளை வாசகன் அடைந்த உடனே இப்படைப்பு நின்று விடுகிறது. குறிப்புக்கதைகளுக்கே உரிய பலவீனம் இது (Aligory) இதை மீறவே ஐதீகங்களையும் தொன்மங்களையும் பயன்படுத்துவது!.... மிகுந்த பிரயாசையுடன் புற உலக யுதார்த்தத்துடன் ஒவ்வொரு வரியையும் இணைக்க முயன்றிருப்பதைத் தவிர்த்திருக்கலாம். கதையின் மொத்தமான கனவுத் தன்மையே போதுமானது. இதன் நனவுப் பிரக்ஞை சற்று பிடி தளர்ந்திருந்தால் மொழி ஆசிரியரைத் தாக்கி அவர் எண்ணாத புதிய எல்லைகளுக்குக் கொண்டு சென்றிருக்கும்''

நனவிலி மனதைக் குடைந்து, உள்மன யத்திதிரை புரிந்து, கனவுத் தளத்தில் மிதந்து, தனது வாசகர்களையும் எண்ணாத புதிய எல்லைகளுக்கு எடுத்துச் சென்றுவிட சிறுகதை எழுதும் உமா வரதராஜனுங் கூட எமது யதார்த்தப் பாதிப்பில் இருந்து விலக முடியாதிருப்பது ஏன்? எமது படைப்புக்களின் தேவை என்ன படிமங்களுக்காகப் படிமங்களைப் புனைவதா, அனைத்தையும் தொன்மங்களோடு இணைத்து ஜெயமோகன் பாணியில் எழுதினால் மட்டுந்தான் இலக்கியமாகுமா?

மக்கள் வழக்கில் வெளிப்படும் சொற்றொடர்களை செப்பனிட்டு இலக்கியமாக்கிவிட முடியாதா? வெறும் கண்ணாடிக் குற்றிகளை படிமங்களால் செதுக்கி பட்டை தீட்டிவிட்டால் வைரக்கற்களாகிவிடுமா? எமது வாழ்வில் இழையோடும் ஏராளமான வைரமணிக் கற்களைப் பட்டை தீட்டி அழகிய வைரங்களாக்க முடியாதா? எமக்கான மொழியையும் வடிவங்களையும் எமது மண்ணிலிருந்தே பெற்று யதார்த்தத்தை மாற்றியமைத்து வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் படைப்புகளை ஜெயமோகன் பாணியில் மட்டுந்தான் வழங்கமுடியுமா?

''இன்றைய கற்கோட்டை உடைந்தால் சில வழிகள் தெரியக்கூடும்'' எனக் கட்டுரையை முடிக்கிற ஜெயமோகன் இருக்கும் கிணற்றுக்குள் இருந்து தவளைக் கூச்சல் போட வேண்டிய குறுகிய அனுபவ எல்லை எமக்கு இல்லை. எமது விரிந்து பரந்த மரபுத் தொடர்ச்சியில் நின்றபடி கருத்துக்களை முன்வையுங்கள். மாறுபட்ட கருத்துக்களும் பிரசுரிக்கப்படும்.

**- காலைக்கதிர்**

## அசிங்கத்திற்கும் எல்லை வேண்டாமா?

மறுநாள் பணிப்பாளர் பதவியை ஏற்கத் தயாராக சென்ற மதியழகனுக்கு பணிப்பாளர் பதவியின்றி மேலதிக பணிப்பாளர் பதவியே காத்திருந்ததாம். ஏனெனில் 12 மணித்தியால நேரத்தில் சிவராசா தான் தொடர்ந்தும் பணிப்பாளராக இருப்பதற்கான வேலைகளை செய்துகொண்டார். (கெட்டிக்காரர்) அதற்கு முழு ஒத்தாசையையும் இசைக் கட்டுப்பாட்டாளர் புரிந்துள்ளார்.

மதியழகன் ஆட்சேபம் தெரிவிக்கவே தற்போது சிவராசாவிற்கு இ.ஒ. கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளராக நியமனக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை அவர் ஏற்காமல் தொடர்ந்தும் தமிழ் சேவைப் பணிப்பாளராகவே இருந்து வருகிறார். மதியழகன் தமிழ்ச் சேவையின் மேலதிக பணிப்பாளராக இருந்து வருகிறார். சிவராசாவோ தொடர்ந்தும் தமிழ்ச் சேவை பணிப்பாளராக இருக்க ஓடோடி வேலை செய்து வருகிறார்.இந்நிலையில் பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்துடன் நெருக்கம் கூடியவரான மதியழகன் ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை மேலதிக பணிப்பாளராக கடமையாற்றும்படி கேட்கப்பட்டுள்ளார். அதற்கு பிறகு அவர் பணிப்பாளராக நியமிக்கப்படலாம் அல்லது வேறேதாவது உயர் பதவிகளில் அமர்த்தப்படலாம் என நம்பப்படுகிறது.

சிவராசா ஐ.தே. கட்சி அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது மட்டுமன்றி ஐ.தே. கட்சி அரசாங்கத்தினர் போன்று அவரும் அவரது பதவியை இலகுவில் விடுவதாக இல்லை. (அவர் கடந்த காலங்களில் ஒலிபரப்பாளராகவன்றி சிறந்த வர்த்தகராக இருந்தார் என்று விமர்சனம் செய்யப்படுகிறார்).

இவ்வாறு மதியழகனுக்கும் சிவராசாவுக்கும் இடையில் கயிறு இழுத்தல் நடைபெறுகின்ற வேளையில் ஐ.தே. கட்சியுடன் நெருக்கமான அருந்ததி ஸ்ரீரங்கநாதன் (ஒலிபரப்பாளரல்ல) சிவராசாவிற்கு உதவும் வகையில் நடந்து கொள்வதற்காக காட்டிக் கொண்டு தமிழ்ச் சேவையின் பணிப்பாளராக வருவதற்கு பாரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறாராம். அந்த முயற்சிகளில் ஒன்றாகத்தான் அமைச்சர்களை 'காக்காய் பிடிப்பதற்காக' தாஜ் சமுத்திரா' ஹோட்டலில் கடந்த மாதம் 4ஆம் திகதி பாரிய செலவில் விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு அந்த அமைச்சர்கள் யாருமே சமூகம் அளிக்காத போதும் முகாரி ராகத்தை இசைக்கவில்லை இசைக்கட்டுப்பாட்டாளர். மாறாக மதியழகனை பணிப்பாளராக வரவிடாது தடுத்து தானே பணிப்பாளராக வர பலவித முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இவ்விடயத்தில் சரியோ பிழையோ பதவியில் இருக்கும் அரசாங்கங்கள் அவற்றிற்கு ஆதரவாளர்களையே வைத்திருக்க விரும்புகின்றன. ஆதரவாளர்கள் விசுவாசமாக நடந்து கொள்வார் என்ற நம்பிக்கையே காரணமாகும்.

ஆனால் ஒலிபரப்பு போன்ற புலமைசார்ந்த விடயங்களில் அனுபவரீதியாக தேர்ச்சி பெற்ற அல்லது அத்துறைசார் கல்வித்தேர்ச்சியுள்ளவர்களையே முக்கிய பதவிகளில் நியமிக்க வேண்டும் என்பதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்வது நல்லது. அதன் மூலம் இவ்வாறான குழறுபடிகளை தவிர்க்க முடியும்.

கே. சசிதரன், கொழும்பு

படிப்பகம்

www.padippakam.com



# இன உரிமைகளை உத்தரவாதம் செய்ய சில உதாரணங்கள்

ஒக்டோபர் முதலாந்திகதியுடன் சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு 45 ஆண்டுகள் பூர்த்தியாகிறது. அந்த மகத்தான தினத்தையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

சின்னஞ்சிறிய நாடான இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையானது ஓர் எரியும் பிரச்சினையாக திகழ்கின்றது. அதே சமயம் உலகிலேயே சனத்தொகை கூடிய நாடான சீனாவின் 116 கோடி மக்களில் 100 கோடிக்கு மேற்பட்டவர்கள் ஹான் இனத்தைச் சேர்ந்தவர்கள். சுமார் 10 கோடிக்கும் குறைவானவர்களே 55 சிறுபான்மை இனத்தவர்களாகும். இந்த வித்தியாசமான சூழலிலேயே சீனாவின் சிறுபான்மை இனங்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலும், சுய கௌரவத்துடனும் விளங்குவதற்கும் ஏற்ற வகையிலும் சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதை சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்று நமது நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு எந்த அளவு அதிகாரப் பரவலாக்கம் இருக்க வேண்டுமெனவும் எந்த அமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமா, அல்லது சமஷ்டி அமைப்பாக இருக்க வேண்டுமா என்ற சர்ச்சையும் கிளப்பப்படுகிறது. உருவாகப் போகும் அமைப்பு சமஷ்டியா இல்லையா என்பது முக்கியமல்ல. சுயாட்சி அமைப்புக்கு எவ்வளவு கூடுதலான அதிகாரம் வழங்கப்படப் போகின்றது என்பதே முக்கியம். ஏனைய நாடுகளின் அனுபவங்களில் இருந்து பெற்ற படிப்பினையிலிருந்து நமது நாட்டின் சூழலுக்கு ஏற்ற வகையில் ஒரு முறையைத் தேடுவதே- உருவாக்குவதே சரியானது.

தமது வர்க்க நிலைப்பாட்டின் காரணமாக இன்று அரசியலமைப்புச் சட்டங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள் என்று புகழப்படும் வில்சன், நீலன் திருச்செல்வம் போன்றோர் சீனாவில் சிறுபான்மை இனங்களுக்கு எவ்வாறு உரிமைகள் சுயாட்சி அமைப்பு மூலமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை வேண்டுமென்றே ஆராயாது விட்டுள்ளனர். அவர்களுக்கு மேற்குலக அரசியல் சட்டங்களைப் பற்றி மட்டுமே விமர்சனம் செய்யத் தெரியும். எனவே தான் சீனாவில் சட்டரீதியாக அரசியல் ரீதியாக சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் உத்தரவாதங்கள் பாதுகாப்பு என்பன பற்றி நாம் சிறிது கவனிப்போமாக.

சீனாவின் சிறுபான்மை இனத்தவர்கள் சனத்தொகையில் 8.04வீதம் மட்டுமேயென்ற போதிலும் சுயாட்சி வழங்கப்பட்ட பிரதேசங்களின் நிலப்பரப்பானது 62% (அறுபத்திரண்டு) என்பது குறிப்பிடத்தக்கதாகும். வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி வழங்கினால் இன விகிதாசாரத்திற்கு கூடுதலான நிலப்பரப்பு தமிழர்களுக்கு போய் விடுமெனக் கூச்சல் போடுகிறவர்களுக்கு இது சமர்ப்பணம்.

சீனாவின் சிறுபான்மை இனங்களை கிண்டல் செய்யும் அவமானம் செய்யும் முகவரிகள் இடப்




பெயர்கள் குறியீடுகள் யாவும் முழுச்சீனாவிலிருந்தும் அகற்றப்பட வேண்டுமென்ற கட்டளையை சீன மத்திய அரசு 1951ம் ஆண்டிலேயே விடுத்திருந்தது. சகல அரசாங்க அமைப்புகளிலும் சகல சிறுபான்மை இனப்பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். ஆகச் சிறிய இனமான ஷெசான் (சனத்தொகை இரண்டாயிரம் மட்டுமே) தேசிய மக்கள் காங்கிரஸை -சீனாவின் உயர் அரசியற் பீடம் -ஒரு பிரதிநிதியைக் கொண்டிருக்கிறது. இன்னமும் எழுத்து வடிவம் பெறாத மொழிகளைப் பேசுகிறவர்களுக்கும் சுயாட்சி அமைப்பு இருக்கிறது.

சீனா முழுமையாக விடுதலையடைய முன்பே உள் மொங்கோலிய சுயாட்சிப் பிரதேசம் 1947ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதிலேயே நிறுவப்பட்டது. இது மாசேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இனங்கள் தொடர்பாக கடைப்பிடித்த கொள்கைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. சிங்கியாங் உய்குர் சுயாட்சிப் பிரதேசம் பதினாறு இலட்சம் சதுர கிலோமீட்டர் பரப்புடையது. அதாவது முழுச் சீனாவின் நிலப்பரப்பில் ஆறில் ஒன்றாகும். அதன் சனத்தொகை ஒன்றரைக் கோடியாகும். திபேத் சுயாட்சிப் பிரதேசத்தின் நிலப்பரப்பு பன்னிரண்டு இலட்சம் சதுர கிலோ மீட்டராகும். இது சீனாவின் நிலப்பரப்பில் எட்டில் ஒன்றாகும். அதன் சனத்தொகையானது சுமார் இரண்டுகோடியாகும். சீனாவில் மொத்தம் ஐந்து சுயாட்சிப் பிரதேசங்கள் உள்ளன.

இந்த ஐந்து சுயாட்சி பிரதேசங்களுக்கு வெளியேயும் குறிப்பிட்ட ஐந்து சிறுபான்மை இனங்களும் பரந்து வாழ்கிறார்கள். அங்கும் கூட செறிவாக வாழும் பகுதிகளில் சுயாட்சி அமைப்புகள் உள்ளன. அதே சமயம் இந்த ஐந்து சுயாட்சிப் பிரதேசங்களுக்குள்ளேயே வாழும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களுக்கு உள் சுயாட்சி அமைப்புகள் உள்ளன. குறிப்பிட்ட 5 சிறுபான்மை இனங்களை விட மிகுதி 50 சிறுபான்மை இனங்களுக்கும் வெவேறு மட்டத்திலான சுயாட்சி அமைப்புகள் உள்ளன. ஐந்து சுயாட்சிப் பிரதேசங்களுக்குள் செறிவாக சில பகுதிகளில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்களான ஹான் இனத்தவருக்கு உள் சுயாட்சி அமைப்புகளும் உள்ளன என்பது கவனித்தக்கது. நாட்டின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் இனரீதியாக எவரும் பாதிக்காத வகையில் சீனாவின் சுயாட்சி அமைப்பு முறை உள்ளது.

இனங்கள் யாவும் சமமானவை என்றும் ஓர் இனம் வேறு ஓர் இனத்தை அடக்கப்படாதெனவும் அரசியலமைப்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை இனத்தவர் என்ற அகங்காரம் எதிர்க்கப்படல் வேண்டுமெனவும் ஓரிடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மேலும் சட்டவலுவை ஏற்படுத்துமுகமாக 1984ம் ஆண்டு அக்டோபர் 1ம் திகதி அமுலுக்கு வந்த பிரதேச தேசிய சுயாட்சி சட்டத்தின் முக்



கிய அம்சங்களை சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்.

சட்டத்தின் முகவுரையில் சீனா பல இனங்களால் உருவாக்கப்பட்ட ஒரு நாடு எனக்குறிப்பிடப்படுகிறது. ''மாக்சிச-லெனிசிச பிரயோகத்தின் மூலம் சீனாவில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சீனக் கம்யூனீஸ்ட் கட்சி கடைப்பிடிக்கும் அடிப்படைக் கொள்கையே பிரதேச தேசிய சுயாட்சியாகும். இது அரசின் ஒரு முக்கிய அரசியல் முறையாகும் எனவும் முகவுரை மேலும் கூறுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்ட பிரதேச, தேசிய சுயாட்சி முறையை அமுல்படுத்துவதற்கான அடிப்படைச் சட்டமே பிரதேச தேசிய சுயாட்சிக்கான சீன மக்கள் குடியரசின் சட்டமாகும்.

பிரதேச தேசிய சுயாட்சிக்கான சட்டத்தின் அறுபத்தியேழு சரத்துக்களையும் விரிவாக ஆராயும் பணியை ஆய்வாளர்களிடம் விட்டு விடுவோம். சீனாவில் சிறுபான்மை இனக்களுக்குள்ள உரிமைகள் குறிப்பிட்ட சட்டத்தின் மூலம் எவ்வாறு உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள உதவுமுகமாக அவற்றின் முக்கிய பகுதிகள் கீழே தரப்படுகிறது.

சுயாட்சி அமைப்புகள் அவற்றின் எல்லைக்குள் உள்ள புற்றரைகள், காடுகள் மற்றும் தேசிய வளங்கள் என்பனவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். புற்றரைகள், காடுகள் என்பனவற்றை பாதுகாத்தல், வளர்த்தல் என்பன சுயாட்சி அமைப்புகளின் நிர்வாகத்திலிருக்கும். தத்தமது நிதி வளங்களுக்கேற்ப உள்ளூரில் மூலதன செய்திட்டங்களை மேற் கொள்ளலாம். தமது பகுதிக்குள் இருக்கும் கைத்தொழில் விவசாய நடவடிக்கைகளை நிர்வகிக்கலாம். மத்திய அரசின் சட்டவரையறைக்குள் வெளிநாடுகளுடன் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடலாம். துறை முகங்களை அந்நியத் தொடர்புக்கு திறந்து விடலாம். வெளிநாடுகளுடன் எல்லைகளைக் கொண்டுள்ள சுயாட்சி அமைப்புகள் மத்திய அரசின் அனுமதியுடன் எல்லை வர்த்தகத்தில் ஈடுபடலாம். வெளி நாடுகளுடான வர்த்தக, வாணிப தொடர்பு கொள்ளும் போது பெறப்படும் வெளி நாட்டுச் செலவாணிகளில் சம்பந்தப்பட்ட சுயாட்சி அமைப்புகளுக்கு விசேட சலுகையுண்டு. சுயாட்சி அமைப்புகள் ஆரம்ப, நடுத்தர பாடசாலைகளை அமைத்து நடத்தலாம். சம்பந்தப்பட்ட மொழியே போதனா மொழியாக இருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட இனத்தின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு பத்திரிகைகள், வெளியீட்டகங்கள், ரேடியோ, தொலைக்காட்சி நிலையங்கள் என்பனவற்றை நிறுவலாம். நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட சுயாட்சி அமைப்பில் உள்ள மொழியையே பயன்படுத்த வேண்டும் நீதிமன்றங்களில் ஏனைய மொழி பேசுவோர் சம்பந்தப்பட்டால் அவர்களது பேச்சு, எழுத்து வழக்கு மொழிகளை உபயோகிக்க அனுமதிக்க வேண்டும். சுயாட்சி அமைப்பிற்குள் இருக்கும் ஏனைய இனத்தவர்கள் சம உரிமையுடையவர்கள்.

நூற்றுக்கு மேற்பட்ட கோடி மக்களைக் கொண்ட சீன நாட்டின் சூழல் வித்தியாசமானது என்றாலும் அந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், அணுகுமுறைகள் என்பனவற்றிலிருந்து சீன தேசிய தினத்தைக் கொண்டாடும் இத்தினத்தில் பல படிப்பினையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இறுதி சாப்பாட்டுச் செலவு ரூபா 80,160/=

கடந்த ஆகஸ்ட் மாதம் 16,17 18ஆம் திகதிகளில் தேர்தல் கடமையிலீடுபட்டிருந்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான சாப்பாட்டுச் செலவு 80 ஆயிரத்து 160 ரூபாய் என கணக்கு காட்டப்பட்டுள்ளது. இச் செலவுத் தொகையை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நலன்புரி அதிகாரி பெற்றுக் கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஐக்கிய அரச வர்த்தக சங்கத்தின் செயலாளராக இருந்த இவர் பின்னர் தேசிய சேவையாளர் சங்கத்தில் (யூ.என்.பி சங்கம்) சேர்ந்தார். அதன் பின்னரே அவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர் நலன்புரி அதிகாரியாகினார் என்று தெரியவருகிறது.

இவர் தேர்தல் காலங்களில் கடமைபுரிந்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு உணவு பொட்டலங்களை வழங்கும் பொறுப்பை ஏற்று ஆகஸ்ட் 14ஆம் திகதி முற்பணமாக 75 ஆயிரம் ரூபாவை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்டார். தேர்தலுக்கு பிறகு மிகுதி 5160/=ஐயும் பெற்றுக் கொண்டார்.

அந்த நலன்புரி அதிகாரிகள் கணக்கு விபரங்கள் பின்வருமாறு:

ஆகஸ்ட் 16ஆம் திகதி கடமையிலீடுபட்டிருந்த 99 பேருக்கான இரவு சாப்பாட்டுச் செலவு கணக்கு தலைக்கு 240/= படி 23760/=. 17ஆம் திகதி காலை, பகல், இரவு சாப்பாட்டுற்கு தலைக்கு 230/=படி 120 பேருக்கான செலவு 27600/= 18ஆம் திகதி தலைக்கு 200/= படி 144 பேருக்கான செலவு 28800/= ஆகும்.

மேற்படி சாப்பாடுகள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலிருந்தன்றி ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிற்றுண்டிச் சாலையிலிருந்தே பெறப்பட்டுள்ளன. அங்கு ஒரு சாப்பாட்டின் அதியுயர் விலை ரூபா13/= ஆகும்.

அத்துடன் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஊழியர்கள் குறிப்பிட்ட அந்த தினங்களில் வேலைக்கு வந்திருக்கவில்லை என்றும் அறியப்படுகிறது.

## சுமைகூலி

ஐ.தே. கட்சியின் ஆட்சியில் ஒரு அமைச்சரின் வாகன பராமரிப்பு செலவாக ரூபா 3 லட்சம் வரை மாதாந்தம் அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

பொ.ஐ.ஐ. முன்னணி அரசாங்கம் ஒரு அமைச்சரின் வாகன பராமரிப்புக்கு மாதாந்தம் ரூபா 13 ஆயிரத்தை மட்டுமே வழங்க தீர்மானித்துள்ளது.

படிப்பகம்

இலங்கையில் சாதியத்தின் தாக்கமானது பல்வேறுபட்ட மக்கள் பிரிவினரிடையே பற்பல அளவுகளில் காணப்படும் ஒன்றாக இருந்து வந்தது. இது இலங்கையில் தோன்றி வளர்ந்த ஒன்றல்ல. அதன் பிறப்பிடம் இந்தியாவாகும். பேராசிரியர் கைலாசபதி இது பற்றிக் குறிப்பிடுகையில் ''இந்திய சமுதாயம் பல்வேறு சாதிகளின் வலைப் பின்னலாகவே இயங்கி வந்தது. ஏனெனில் தொடக்கத்தில் வைதீக நெறியின் அடிப்படையிலே நால்வருணப் பாகுபாடு நிலவிய போது அது ஓர் இந்துமத நிறுவனமாய் இருந்தது. ஆனால் காலப் போக்கில் பெருகிக் கொண்டேபோன சாதி தருமமானது, இந்திய நிறுவனமாயிருந்தது. இவ்வாறு இந்திய நிறுவன வடிவம் பெற்ற சாதியம் சக்கட்டத்தை அடைந்திருந்தது - சீனாவில் கலாச்சாரப் புரட்சி - இந்தியாவில் நக்சல் பாரிப் போராட்டம்.

இலங்கையிலும் இத்தகைய சர்வதேச எழுச்சிகளினால் போராட்டங்கள் வெடித்தன. 1965ல் யூ.என்.பி ஆட்சி பீடமேறியிருந்தது. அந்த மந்திரிசபையில் தமிழரசுக் கட்சியும் இடம் பெற்றிருந்தது. இவை சாதிவெறிப் பிற்போக்குவாதிகளுக்கு உற்சாகமூட்டியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வடபகுதியில் இயங்கி வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். தீண்டாமைக்கும், சாதி அமைப்புக்குமெதிரான போராட்டத்தில் தெளிவான தலைமைக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம் மகத்தானது.

குடிநீர் இன்றி வாழ்ந்து வந்த அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட குழாய் நீரை நீடித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குழாய் நீர் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதே பிரச்சினையின் மையமாகும். அம்மக்கள் சார்பாக கட்சி எடுத்த கடும் முயற்சியினால் அரசாங்கம் அக்குழாய் நீரை நீடித்து வழங்கத் தயாராக இருந்த போதிலும் அவ்வூர் சாதிவெறியர்கள் குடிநீர் வழங்க மறுப்புத் தெரிவித்து பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டனர். இது ஒரு போராட்டமாகவே எழுந்தது. சாதிவெறியர்களும் அவர்கள் பக்கத்தில் பொலீசும் தாழ்த்தப்பட்ட பொன்னாலை மக்களுக்கு எதிராக இருந்து செயற்பட்டனர்..

லத்தை தடுத்து நிறுத்த பொலீஸ் படை சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தயாராகி கொண்டிருந்தது. ஊர்வலத்திற்கு தயாராய் நின்றவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் இருக்கவில்லை. பலதரப்பட்டவர்களும் இருந்தனர்.

''சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்'' இலங்கை கம்யூனீஸ்ட் கட்சி வாழ்க என்ற இடி முழக்க கோஷங்களுடன் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தின் முன்னணியில் கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, டாக்டர் சு.வே.சினீவாசகம், கே.டானியல், டி.டி.பேரேரா ஆகியோர் தலைமை தாங்கிச் சென்றனர். ஊர்வலம் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தையடைந்ததும்

# 1966 அக்டோபர் 21 எழுச்சி!

வரலாற்றுப் போக்கில் இலங்கையிலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது'' என்று கூறினார்

இத்தகைய சாதியம் அதன்பாற்பட்ட தீண்டாமையும் தமிழர் சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாகக் கொடுவினைகளை ஆற்றி வந்துள்ளது. தமிழர்கள் மத்தியில் கடும் உடல் உழைப்பாளிகளான உழைக்கும் மக்களை சாதியம் அடக்கியொடுக்கி தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலையில் வைத்து வந்தது. நிலப்பிரபுத்துவ வழிவந்த 'தமிழ்ப் பெருங்குடியினர்' தமது வர்க்க நலன் பேணும் கருவிகளில் ஒன்றாக சாதியத்தை பயன்படுத்தியதோடு தமிழர்களின் பழம்பெருமை பேசும் கூறுகளில் ஒன்றாகவும் சாதியத்தைக் கொண்டனர்.

எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் உண்டு. எங்கு போராட்டம் உண்டோ அங்கு தியாகங்களும் உண்டு. ஆனால் அநாவசியமான தியாகங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்' என்ற புரட்சிகரப் போராட்டப் பாதையில் ஆண்டாண்டு கால அடக்குமுறையின் கீழ் அழுந்திக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

அறுபதாம் ஆண்டுகள் சர்வதேச ரீதியாகப் பெரும் எழுச்சிகளும் போராட்டங்களும் முன்னெழுந்து சென்ற தசாப்த காலமாகும். ஆசியாவில் அமெரிக்காவுக்கு எதிரான நேரடிப் போராட்டத்தில் வியட்நாம், லாவோஸ், கம்போடிய மக்கள் வீரதீரத்துடன் போராடினர். அமெரிக்காவில் வெள்ளை நிறவெறிக்கு எதிராக கறுப்பு மக்கள், பெரும் போராட்டச் சுவாலையை ஏற்படுத்தினர். இந்த காலப்பகுதியில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் புரட்சிகளும் கருத்துக்களுக்கும் நவீன திரிபுவாதத்திற்கு எதிராக வாதப் பிரதிவாதங்கள் உச்

அக்கட்சியைப் பற்றி சுருக்கமாக குறிப்பிடுவது அக்டோபர் எழுச்சியை நினைவு கூரும் போது அவசியமாகின்றது.

1964ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டது. இப்பிளவு வடபகுதியிலும் இடம் பெறவே செய்தது. பாராளுமன்றப் பாதையை முற்று முழுதாக ஏற்றுக் கொண்ட பீற்றர் கொனமன், விக்கிரமசிங்கா தலைமையிலான ''மாஸ்கோசார்பு'' கட்சியினருக்கு செல்வாக்கு குறைவாகவே காணப்பட்டது. அந்தப் பக்கத்தில் அ. வைத்திலிங்கம், ஐ. ஆர். அரியரத்தினம், வ. பொன்னம்பலம், எம்.சி. சுப்பரமணியம் ஆகியோர் இருந்தனர். இவர்கள் சமாதானமான பாராளுமன்றப் பாதை சாத்வீகம் சலுகை பற்றியே கூடுதலாக அலசிக் கொண்டனர். மறு பக்கத்தில் ''பீக்கிங் சார்பு'' எனக் கூறப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் புரட்சிகரப் போராட்டங்கள் மூலம் சமுதாய மாற்றம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். இந்த அணியில் மு. காந்திகேசன், டாக்டர் சு. வே. சீனிவாசகம், கே. ஏ. சுப்பிரமணியம் , வி.ஏ. கந்தசாமி; கே. டானியல் போன்றோர் இருந்தனர். இந்தக் கட்சி தான் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களின் மூலம் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய 1966ம் ஆண்டுச் சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையை போராட்டப் பாதையில் முன்னெடுத்துச் செல்லும் வேலைமுறை பற்றிய விவாதத்தை வடபிரதேசக் கமிட்டி எடுத்தது. பொன்னாலைக் கிராமத்தில் வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கிய தண்ணீர்ப் பிரச்சினையை த் தீர்ப்பதை கட்சியின் வலி-மேற்கு கிளை ஒரு வேலையாகச் செய்து வந்தது. அதாவது

பொன்னாலைத் தண்ணீர்ப் போராட்டம் ஒரு பரீட்சாத்தமான போராட்டமாகவும் பல பயனுள்ள படிப்பினைகளைத் தந்த போராட்டமாகவும் இருந்தது. இப்போராட்டத்தை நிதானமாக முன்னெடுப்பதில் கே. ஏ. சுப்பரமணியம் உரிய பங்கினை ஆற்றியிருந்தார். இப் போராட்டத்தில் பங்கு கொண்ட மக்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் சாதி வெறியர்களின் தாக்குதல்களுக்கும் பொலிஸ் அடக்கு முறைகளுக்கும் ஆளாகினர். பொன்னாலைப் போராட்டத்திற்கு சங்கானை மக்களும் தோழர்களும் ஆதரவு கொடுத்து பக்கபலமாக இருந்தனர். இறுதியில் பொன்னாலைப் பகுதி மக்கள் குழாய் மூலமான குடிநீரைப் பெற்று தமது விடாப்பிடியான போராட்டத்தில் வெற்றி பெற்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்நோக்கும் சாதி தீண்டாமைக்கு எதிரான போராட்ட இயக்கத்தை ஆரம்பிக்கும் வகையில் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடாத்த வேண்டுமெனப் பிரதேசக் கமிட்டி தீர்மானித்தது. சுன்னாகத்தில் இருந்து ஊர்வலத்தை ஆரம்பித்து யாழ் வரை நடாத்தி முற்றவெளியில் பொதுக்கூட்டமொன்றை 21ம் திகதி நடாத்த தீர்மானித்து பொலிஸ் அனுமதி கேட்கப்பட்டது. எதிர்பார்த்தபடியே அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் ஊர்வலத்திற்கான ஏற்பாட்டை கட்சி செய்து கொண்டிருந்தது. ஒக்டோபர் 21ம் திகதி வட பிரதேசத்தின் சகல பகுதியிலிருந்தும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சுன்னாகம் சந்தையில் கூடினர். ''சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்'' என்ற செம்பதாகை கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. ஊர்வ

பொலீஸ் அதிகாரிகள் ஊர்வலத்தை தொடர முடியாதெனவும் கலைந்து போகும்படியும் கூறினர். ஊர்வலத்தினர் மறுக்கவே பொலிசார் தாக்குதல் மேற்கொண்டனர். முன்னணியில் சென்ற தோழர்கள் காயத்துக்குள்ளானர். இரத்தக்காயங்களுடன் கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, இ.கா.சூடாமணி ஆகியோர் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் பூட்டப்பட்டனர்.

பொலிசார் எதிர்பார்த்தது நடக்கவில்லை. மக்கள் தொடர்ந்தும் ஊர்வலமாகச் செல்ல முற்பட்டனர். முன்னும் பின்னும் பொலீஸ் வாகன அணி வகுப்புடன் ஊர்வலம் யாழ் சென்றது. கூட்டத்திற்கு டாக்டர் சு.வே.சீனிவாசகம் தலைமை தாங்கினார். அன்றைய கட்சியின் செயலாளர் நா.சண்முகதாசன், கே.டானியல் வாலிப இயக்கத்தின் சார்பில் சி.கா.செந்திவேல் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினார். ஊர்வலத்திற்கு ஒருபகுதியினர் தலைமை தாங்கவும் அதே சமயம் கூட்டத்தை திட்டமிடப்பட்டபடி நடாத்த வேறு ஒரு தலைமைக்குழுவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. ஊர்வலத்தில் பொலிசாரின் அடாவடித்தனம் நிகழும் எனவே வேறு பிரமுகர்களே கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டியேற்படும் என்பதை உணர்ந்து கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் செயற்பட்டனர்.

அன்றைய ஊர்வலத்தின் மீதான தாக்குதல் முழுத் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும் விழுந்த தாக்குதலாக மாறியது. தாழ்த்தப்பட்ட மக்கள் விழித்தெழுவதற்கு ஒக்டோபர் 21 ஊர்வல எழுச்சி திசை காட்டியது.

## சிந்தனைக்கு ...

★ இலங்கை அரசாங்கம் வருடாந்தம் கல்விக்காக செலவழிக்கும் தொகை 1500 கோடி ரூபாய்.

சுகாதாரத்திற்கான செலவு 750 கோடி ரூபாய்.

★ ஒரு வருடத்திற்கு யுத்தத்திற்காக செலவழிக்கப்படும் தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய்.

★ 1983ஆம் ஆண்டு இலங்கையின் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 12,500

1993ஆம் ஆண்டு எண்ணிக்கை 80,000

★ 1983இல் உயிரிழந்த பொலிஸ் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 18.

1993இல் எண்ணிக்கை 1317.

★ தமிழ்த் தீவிரவாதிகள் என்ற பேரில் 1983இல் கொல்லப்பட்டோரின் தொகை 40.

1993இல் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்துக்கு மேலாகும்.

★ இலங்கை மக்களில் 16 பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் அகதிகளாக இருக்கின்றனர். தென்னாசியாவிலேயே பெரிய அகதிகள் முகாம் இலங்கையில் மடுவில் இருக்கும் முகாம் ஆகும்.

★ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 87ஆயிரம்.

அகதிகள் முகாம்களிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 25 ஆயிரம்.

திறந்த பொருளாதார அமைப்பு ஒன்றே இன்று உலகை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஒரு சர்வரோக நிவாரணி என்று முதலாளித்துவத்தை பாதுகாக்க விரும்புகிறவர்கள் கூறி வருகிறார்கள். திறந்த பொருளாதார அமைப்பினால் உலகில் பிரச்சினைகள் தீர்ந்ததா? பின்வரும் செய்திக் குறிப்புகள் உங்கள் சிந்தனைக்கு.

★ உலகில் சுமார் நூறு கோடி மக்கள் -வயது வந்தவர்களில் 35%- எழுத்தறிவு அற்றவர்களாக இருந்து வருகின்றனர். தொடக்கக் கல்வியை விட்டுச் செல்பவர்களின் விகிதம் 30% கூடுதலாக உள்ளது.

★ உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினரான 130 கோடி மக்கள் இன்னமும் கடும் வறுமையில் உழன்று வருகின்றனர்.

★ ஒவ்வொரு நாளும் சுமார் 34,000 இளம் பிள்ளைகள் போஷாக்கின்மையாலும் நோயினாலும் மரணித்து வருகின்றனர்.

★ எழுத்தறிவற்றவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்களாகும்.

★ பல்வேறு கட்டங்களில் தரிசு நிலமாகிக் கொண்டு வரும் பிரதேசங்களில் சுமார் 85 கோடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# வட அயர்லாந்து: யாருடைய பயங்கரவாதம்?

- மோகன் -

மேலைத்தேச செய்தி நிறுவனங்களையும் முதலாளித்துவ ஏடுகளையும் நம்பிப் பழைய வரலாற்றில் ஒரு பகுதியை மறந்து விடுவோமானால் வட அயர்லாந்தில் இருக்கிற பிரச்சினை ஐரிஷ் விடுதலைப்படையினரின் (ஐ.ஆர்.ஏ) வன்முறையும் பயங்கரவாதமுமே என்ற முடிவுக்கு வருவது சுலபம். முழு அயர்லாந்தையும் வன்முறை மூலம் ஒருங்கிணைக்கும் கனவினால் திசைதிரும்பியவர்களது இயக்கமே ஐ.ஆர்.ஏ என நம்புவோர் உள்ளனர். மனநோயாளிகளது இயக்கமாக அதை வர்ணிப்போரும் உள்ளனர். இன்று வட அயர்லாந்தில் 25 வருட காலமாக நடந்து வந்த அனாவசியமான மரணங்கள் ஓயும் வாய்ப்பு ஏறத்தாழ உறுதியாகி விட்டது. இச்சூழலில் இப்பிரச்சினையை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்குவது பயனுள்ளது.

12ஆம் நூற்றாண்டில் ஆங்கில ஆதிக்கவாதிகள் அயர்லாந்தின் மீது நடத்திய ஆக்கிரமிப்பின் விளைவாக அந்த நாடு ஆங்கில முடியாட்சிக்கு உட்பட்டது. ஐரிஷ் மக்களுடைய காணிகள் பறிக்கப்பட்டு ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டன. அடுத்தடுத்து வந்த ஆங்கில அரசுகள் தமது அடக்குமுறையை அதிகரித்து வந்தன. இங்கிலாந்தில் கத்தோலிக்க மதம் நிராகரிக்கப்பட்டு இங்கிலாந்துத் திருச்சபை என்ற புரொட்டஸ்தாந்து மதஸ்தாபனம் நிலைகொண்டபின், அயர்லாந்தின் பெருவாரியான கத்தோலிக்க மக்கள் மத அடிப்படையிலும் ஒடுக்கப்பட்டனர். ஸ்கொட்லாந்திலிருந்து குடியேறியவர்களையும் மதம் மாறியவர்களையும் கொண்ட புரொட்டஸ்தாந்து சிறுபான்மையினரிடமே இருந்த செல்வந்தர்கள் சிலரது கையிலேயே நாட்டின் செல்வம் திரண்டு இருந்தது. கத்தோலிக்கர்கள் பண்ணை அடிமைகளாகவும் பிற்படுத்தப்பட்ட கூலி உழைப்பாளர்களாகவுமே வாழ்ந்தார்கள். சொல்லப்போனால் போனால் கத்தோலிக்க மதத்தவர்கள் பண்ணை விலங்குகளை விட மோசமாகவே நடத்தப்பட்டார்கள்.

பின்னர் முதலாளித்துவத்தின் வளர்ச்சி சில கத்தோலிக்க முதலாளிகளையும் ஒரு நடுத்தர வர்க்கத்தையும் உருவாக்கிய போதும், அயர்லாந்தின் கத்தோலிக்க மக்கள் பிற்படுத்தப்பட்டு வறுமையிலேயே பெரும்பாலும் உழன்றனர். ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஐரிஷ் மக்கள் தமது மொழியிற் கல்வி கற்கும் உரிமையை இழந்தனர். இதன் விளைவாகச் சென்ற நூற்றாண்டிலேயே அவர்களது மொழியான கெல்ற்றிக் மொழி வழக்கொழிந்து போனது.

ஒடுக்கப்பட்ட ஐரிஷ் மக்கள் தமது உரிமைக்காகப் போராட முனைந்தபோது, ஒரு பெரிய கொலனித்துவ வல்லரசாக வளர்ந்து விட்ட இங்கிலாந்து அப்போது ஸ்கொட்லாந்தையும் தன்னுடன் இணைத்து வேல்ஸ், கோண்வோல் போன்ற பகுதிகளையும் உள்ளடக்கிய பிரிட்டனாகிய நிலையில், அந்த எழுச்சியைக் கொடுமையாக நசுக்கியது.

1793ல் தொடங்கிய போராட்டம் பிரித்தானிய அடக்குமுறையின் விளைவாக ஒரு விடுதலை இயக்கமாக விருத்தி பெற்றது. அயர்லாந்தின் விடுதலைக்கான போராட்டமாக அது வளர்ந்த போது, மாக்ஸ், ஐரிஷ் மக்களுக்கு விடுதலை இல்லாமல் பிரித்தானிய தொழிலாளி வர்க்கத்திற்கு விடுதலை இல்லை என்று பிரகடனம் செய்தார்.

ஐரிஷ் மக்களது போராட்டம் அடக்குமுறைக்குப் பணியாத ஆயுதம் ஏந்திய போராட்டமாக, ஒருபுறம் வெகுஜன இயக்கமாகவும், மறுபுறம் தலை மறைவான போராளி இயக்கமாகவும், வளர்ச்சி பெற்றபோது பிரிட்டனில் அதி வலதுசாரிப் பழமைவாதக் கட்சியிடமிருந்து (கொன்சவேற்றிவ்கள்) அதிகாரத்தைக் கைப்பற்றிய தாராள வாதிகள் (லிபரல்கள்) 1910ல் அயர்லாந்துக்குச் சுயாட்சி வழங்க முற்பட்டனர். இது அயர்லாந்தின் புரொட்டஸ்தாந்து நில உடைமையாளர்களது சீற்றத்தைக் கிளறியது. மதத்தை அடிப்படையாக வைத்து அயர்லாந்துப் பிரித்தானிய ஒன்றியத்தில் ஒரு பகுதியாகத் தொடர்வதற்கான ஒரு இயக்கம் (யூனியனிஸ்டுகள்) அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. கத்தோலிக்கர்கள் பற்றிய அவதூறுகளையும் கத்தோலிக்க வத்திக்கான் அதிகார பீடம் பற்றிய அச்சங்களையும் பரப்பி பெருவாரியான புரொட்டஸ்தாந்து மக்களை விடுதலைக்கு மட்டுமன்றி சுயாட்சிக்கே விரோதமாகத் திருப்பியதில் இவர்களுக்குப் பிரித்தானிய அதிகார வர்க்கத்தின் பூரண ஆசியும் இருந்தது. எனவே சுயாட்சி முயற்சி கைவிடப்பட்டது. விடுதலைப் போராட்டம் உக்கிரமானது. 1916ல் கடுமையான ஆயுதம் ஏந்திய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலாம் உலகப்போரின் பின் விடுதலைப் போராட்டம் மேலும் உக்கிரமானது. 1919ல் ஐரிஷ் மக்கள் சார்பில் பாராளுமன்றம் ஒன்று உருவானது. இதற்கு மூலாதாரமாக இருந்த சக்தி ஷின் ஃபெய்ன் (நமது தனித்துவம்) என்ற இயக்கம். அதன் படையின் பேர் ஐரிஷ் விடுதலைப்படை (ஐ.ஆர்.ஏ). சினங்கொண்ட பிரித்தானிய அரசாங்கப் படைகள் அயர்லாந்தின் நகரங்களைத் தீக்கிரையாக்கிய போதும், விடுதலைத்தீ தணியவில்லை. 1921ல் பிரித்தானிய ஆட்சியாளர்கள் அயர்லாந்திற்குச் சுதந்திரம் வழங்க உடன்பட்டனர். ஆயினும் யூனியனிஸ்டுக்களை காரணங்காட்டி வட அயர்லாந்தை(அல்ஸ்ற்றர்) என்ற பெயரில் தம் கீழ் வைத்திருக்க முற்பட்டனர்.

இதன் விளைவாக ஷின் ஃபெய்னில் ஒரு பிளவு ஏற்பட்டது. இந்த அரைகுறையான விடுதலையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமானவர்களின் கைக்குத் தென் அயர்லாந்து அரசதிகாரம் மாறியது. சுதந்திரமான ஐரிஷ் குடியரசிலிருந்து நாட்டின் வடபகுதியில் பெரும்பான்மைப் புரொட்டஸ்தாந்து மக்களைக் கொண்ட பகுதி பிரிக்கப்பட்டு பிரித்தானிய அதிகாரத்தின் கீழ் தொடர்ந்தது. ஆயினும் பெருவாரியான ஐரிஷ் மக்களால் இதை ஏற்க முடியவில்லை. எனவே அயர்லாந்தின் அரசியல் யாப்பு வட அயர்லாந்தையும் உள்ளடக்கியே எழுதப்பட்டது. அயர்லாந்து விடுதலை இயக்கத்தின் பிளவின் பின் ஷின் ஃபெய்னிலிருந்து தோன்றிய ஆளுங்கட்சியிலிருந்து பிரிந்த ஒரு பகுதியினர் ஷின் ஃபெய்ன் என்ற தொடர்ந்தனர். ஐ.ஆர்ஏ. கலைக்கப்பட்டுந்தது. ஆயினும் அதில் ஒரு பகுதியினர் தலைமறைவாகத் தற்காலிக ஐ.ஆர்.ஏ என்ற பெயரில் இயங்கினர். அதிலும் பிளவு ஏற்பட்டு அவர்கள் மேலும் பலவீனமடைந்தனர்.

ஐரிஷ் விடுதலைக்கு 40 வருடங்கள் பின்னும் இங்கிலாந்தில் ஐரிஷ் மக்கள் கேவலமாகவே நடத்தப்பட்டனர். நாய்கள் வேண்டாம், ஐரிஷ் காரர் வேண்டாம், கறுப்பர்கள் வேண்டாம் என்ற விதமான விளம்பரங்கள் தனியார் விடுதிகளில் 1960 களிலும் காணப்பட்டன. வட அயர்லாந்தில் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டனர். உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குரிமை சொத்துடமையின் அடிப்படையில் இருந்தால் காணிச் சொந்தக்காச் செல்வந்தர்களது ஆதிக்கம் தொடர்ந்தது. கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பின்தள்ளப்பட்டனர். அவர்களிடையே வறுமையும் கல்வி அறிவின்மையும் மேலோங்கி இருந்தது.

கத்தோலிக் மக்களது உரிமைகட்கான சமாதானப் போராட்டங்கள் யூனிஸ்ட்டு சக்திகளது தாக்குதலுக்கு ஆளாயின. உள்ளூராட்சியும் பொலிசும் கத்தோலிக்கர்கட்கு விரோதமாகவே செயற்பட்டன. கத்தோலிக்கர்கள் வட அயர்லாந்தின் அதிகார சக்திகளது வன்முறையின் விளைவாக அங்கு கொந்தளிப்பு அதிகரித்தது. 1969ல் பிரித்தானிய ஆட்சி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர தமது இராணுவத்தை அனுப்பினர். கத்தோலிக்க மக்கள் பிரித்தானிய இராணுவம் நியாயமாகத் தமக்குப் பாதுகாப்புத் தரும் என் நம்பி மகிழ்வுடன் வரவேற்றனர். ஆயினும் வெகு விரைவிலேயே அதுவும் யூனிஸ்டுகளது கூட்டாளியாகத் தன்னைக் காட்டிக் கொண்டது. கத்தோலிக்க மக்க்ளது சாத்வீகமான குடியுரிமைப் போராட்டங்கள் நசுக்கப்பட்டு வந்த சூழலில் வன்முறைக்கானத் தேவையை இளைய தலைமுறையினர் உணரத் தொடங்கினர். இதன் விளைவாக் வடக்கில் தற்காலிக ஐ.ஆர்.ஏ மீண்டும் வளர்ச்சி பெற்றது. அதன் நேச சக்தியாக ஷின் ஃபெய்ன் அங்கு வேரூன்றியது. ஆயினும் பாராளுமன்ற அரசியலில் சோஷலிச ஜனநாயகத் தொழிற்கட்சி (எஸ்.டி.எல்.பி) எனும் இடது சார்பான ஒரு கட்சியே கத்தோலிக்கர்களது பிரதிநிதியாயிற்று. யூனியஸ்டுக்களிடையே தீவிரவாதிகள் உருவாகி அவர்களது கட்சி பிளவுபட்டாலும், இரண்டு கட்சிகளும் கத்தோலிக்க விரோத வலது சாரிக் கட்சிகளாகவே இருந்தன. இவற்றின் அனுசரணையுடன் கத்தோலிக்க விரோத வன்முறை இயக்கம் பலவும் குண்டர் படைகளும் உருவாயின.

பிரித்தானிய இராணுவத்தின் பாரபட்சம் காரணமாக அது வடக்கிலிருந்து வெளியேற வேண்டுமென்பதே கத்தோலிக்க மக்களினதும், ஐ.ஆர்.ஏயினதும் நிலைப்பாடாக இருந்தது. தெற்கு தம்மைப் பிடித்து விடும் என்ற விதமான பொய் அச்சத்தைக் காரணங்காட்டி யூனியனிஸ்ட்டுகள் இராணுவம் தொடர்ந்தும் இருப்பதை ஆதரித்தனர். ஆயுதம் ஏந்திய சக்திகட்கிடையிலான மோதலாக இருந்த போராட்டத்தில் சாதாரண குடிமக்களும் பலியாகினர்.

இது வட அயர்லாந்தின் பிரச்சினை மட்டுமேயென்று அசமந்தமாக இருந்த பிரித்தானிய ஆட்சியாளர்களை உலுப்பவும், பிரித்தானிய இராணுவம் வடக்கில் உள்ளவரை பிரித்தானிய ஆட்சியே அதன் விளைவுகட்கும் பொறுப்பு என உணர்த்தவும் ஐ.ஆர்.ஏ. தனது போராட்டத்தை ஆங்கில மண்ணுக்குக் கொண்டு சென்றது. அதன் இலக்குகள் ஆங்கிலப் படைகள் குடிகொண்ட பிற இடங்களையும் உள்ளடக்கியது. பிரித்தானிய ஆட்சியாளர்களும் அரச பிரமுகர்களும் அதன் தாக்குதல்களுக்கு இலக்காகினர். வியாபார நிறுவனங்கள், பெருங் கட்டிடங்கள் போன்றனவும் தாக்கப்பட்டன. ஐ.ஆர்.ஏயின் போராட்டத்தின் பயங்கரவாதப் பண்பும் இராணுவம் சாராத இலக்குகளும் அதன் செல்வாக்குக்குக் கெடுதலாகவே இருந்தன. ஆயினும் அமெரிக்காவிற்குப் புலம் பெயர்ந்த பெருந்தொகையான ஐரிஷ் கத்தோலிக்கர்களது செல்வாக்கு அங்கு அவர்கட்கு ஓரளவு அனுதாபமான சூழலைப் பேணியது. ஏகாதிபத்திய விரோத விடுதலை இயக்கங்களும் சில அரசாங்கங்களும 1970களில் ஐ.ஆர்.ஏயை மும்முரமாக ஆதரித்தன. எனவே ஐ.ஆர்.ஏயை முறியடிப்பது அசாத்தியமான தொன்றாகி விட்டது. ஐ.ஆர்.ஏ வன்முறை மூலமும் தனிநபர் பயங்கரவாதம் எனக் கருதக்கூடிய செயல்களாலும் ஒருபுறம் பிரித்தானிய அரசுக்குத் தொல்லை கொடுத்தாலும் அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கும் வாய்ப்பு அதற்கு இல்லை என்பதோடு அது அதன் நோக்கமும் அல்ல.

ஐ.ஆர்.ஏயை அடக்கும் நோக்குடன் வடக்கிலிருந்த யூனியஸ்டு சக்திகளையும் கத்தோலிக்க விரோதக் கொலைக்காரக் குண்டர் படைகளையும் மறைமுகமாக ஊக்குவித்து வந்த பிரித்தானிய அரசாங்கம் புதிய ஐரோப்பியச் சூழலை இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவு அவசியம் என உணர்ந்துள்ளது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் தமது கொல்லைக்குள் நடக்கும் அசம்பாவிதங்களைத் தடுக்க முடியாது உலகுக்குப் போதிப்பது பிரிட்டனுடைய செல்வாக்கை மிகவும் பாதித்தது. இந்தச் சூழலிலேயே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத விதமாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஐ.ஆர்.ஏயின் யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுகிறார்கள். வட அயர்லாந்தில் சமூக நீதிக்கான உடன்படிக்கை ஒன்று பிரித்தானிய ஐரிஷ் ஆட்சியாளர்களிடையே உருவான பின்னரே ஷின் ஃபெய்ன் மூலம் ஐ.ஆர்.ஏ யுத்த நிறுத்தம் செய்யுமாறு தூண்டப்பட்டது. ஐ.ஆர்.ஏயின் நீண்ட காலத் தயக்கத்தை பிரித்தானிய ஆட்சியாளர்கள் தமக்கு வசதியான பிரசாரமாகப் பாவிக்க முற்பட்டாலும், சர்வதேச மட்டத்தில் அது எடுபட வில்லை. இந்த யுத்தநிறுத்தத்தை ஒரு சரணாகதியாகக் காட்ட பிரித்தானிய ஆட்சியாளர்கள் முயல்வதற்கு ஒரு காரணம் தாங்கள் ஊட்டி வளர்த்த பயங்கரவாதிகள் தங்களுக்கு எதிராகத் திரும்பிவிடும் அபாயம் தான்.

இன்று வட அயர்லாந்தில் அமைதிக்கான சூழல் உண்டாகி விட்டது. அதற்கெதிரான மிரட்டல் யூனியஸ்ட் குண்டர்களிடமிருந்தே வரக்கூடும். அவர்களைத் திருப்தி செய்யும் நோக்குடன் பிரித்தானிய ஆட்சியாளர்கள் நடந்து கொள்வார்களேயானால் இந்த அமைதி நிலைக்காது. வடக்கிலிருந்து பிரிட்டன் படைகளை வெளியேற்ற வேண்டும். அதுவே அமைதிக்கான உத்தரவாதம். அயர்லாந்தின் வடக்கும், தெற்கும் இணைவது துப்பாக்கி முனையில் சாத்தியமாகாது என்பதை ஐ.ஆர்.ஏ அறியும். துப்பாக்கி முனையில் அந்த ஐக்கியத்திற்கு உள்ள வாய்ப்பை மறுப்பதும் அபாயகரமானது என்று பிரித்தானிய ஆட்சி இனியாவது உணர வேண்டும்.

வரவுள்ள தீர்வு ஐ.ஆர்.ஏயின் பயங்கரவாதத்தின் வெற்றியல்ல. கத்தோலிக்க ஐரிஷ் மக்களின் நியாயமான போராட்டத்தின் வெற்றியே அது. ஐ.ஆர்.ஏயின் பல செயல்கள் நம்மால் ஏற்கமுடியாதனவாய் இருந்தன என்றால் அவற்றைச் சாத்தியமாக்கி

→ 11

படிப்பகம்

www.padippakam.com



## நாட்டைக் குலுக்கிய ......

சொற்ப காலத்தில் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட முடியாதுதான். ஆனால் இந்நாட்டின் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்ய வாக்குறுதி அளித்தபடி பொ.ஜ.ஐ. முன்னணி என்ன செய்யப் போகிறது? குறிப்பாக சாதாரண தொழில் உரிமைகள் கூட இல்லாத சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் உரிமைகள் எவ்வாறு உறுதி செய்யப்படும்.

தொழிலாளர்களின் உரிமைகளை பொ.ஜ.ஐ. முன்னணி மறுக்க முடியாது. மறுத்தால் பொ.ஜ.ஐ. முன்னணி கூட்டு நிலைக்க முடியாது. ஏனெனில் தொழிற்சங்க உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் விட்டுக் கொடுக்காத பல கட்சிகளின் கூட்டே பொ.ஜ.ஐ. முன்னணியாகும்.

வெளிநாட்டுக் கம்பனிகளின் ஏதேச்சாதிகாரப் போக்கை அனுமதிக்கப் போவதில்லை என்றும் மனிதாபிமானத்துடனான திறந்த பொருளாதாரமும் இருக்கவே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சந்திரிகா கூறிவந்தார். அதைக் காப்பாற்ற அவர் என்ன செய்யப் போகிறார்?

அதாவது புதிய அரசாங்கத்திற்கு, தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கும், இலங்கையின் செல்வத்தைக் கட்டுப்பாடின்றி சுரண்டும் வெளிநாட்டுக் கம்பனிகள் பெரிதும் அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

அதேவேளை வெளிநாட்டு முதலீடுகளின்றி சமாளிக்கவும் முடியாத நிலையும் இருக்கின்றது. வெளிநாட்டு முதலீடுகளைப் பாதுகாக்கவும், தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யவும் வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் அமையின்மையை அரச எதிர்ப்புச் சக்திகளான யூஎன்.பி, ஜே.வி.பி என்பன அவற்றுக்குச் சார்பாகப் பயன்படுத்தாமல் நிலைமைகளை வெற்றி கொள்வது எப்படி என்பதுவும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்விடயங்கள் தொடர்பாக சரியான தகவல்களை எடுத்துக் கொண்டு அரசாங்கம் சரியான முறையிலும் நிதானத்துடனும் செயற்பட வேண்டும். காயப்பட்டவர்களை வைத்தியசாலைகளில் அனுமதித்தவர் ஜே.வி.பி தலைவர் அஜித் குமார என்று பகிரங்கமாகப் பிரதமர் கூறியது பிழையென நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தொடர்பாகச் சரியான தகவல்களையும் நடைமுறைகளையும் கண்டறியத் தொழிலாளர்களின் உரிமைகளும், தொழில் நிறுவனங்களினதும் இலாப நோக்கமும் ஓரளவாவது சமரசம் செய்யும் நிலையை உடனடியாகக் கண்டறியவும் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். இக்குழு மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தொழிலாளர்களின் போராட்டத்தினை ஜே.வி.பி போன்ற சக்திகள் கையாளுகின்றன என்று குற்றம் சாட்டுவதுடன் வெளிநாட்டுக் கம்பனிகளுடன் தொடர்ந்தும் தொழிலாளர்கள் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்றும் புதிய அரசாங்கம் எதிர்பார்க்கமுடியாது. அந்நிலைப்பாட்டால் பிரச்சினை தீரப் போவதில்லை.

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயப்பட்டோரை ஜே.வி.பி தலைவர்களில் ஒருவரான அஜித்குமார பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றபடியால் ஜே.வி.பிக்கு இப்போராட்டத்தில் சம்பந்தம் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அரசியல் அக்கறையினால் அரசியல்வாதிகள் காயப்பட்டோரைப் பார்வையிட வைத்தியசாலைக்குச் செல்வது வழக்கம். அதுவும் அவர்களின் சுதந்திரம்.

பிழையான சக்திகள் அரசாங்கத்தை கவிழ்க்க இடமளிக்காது தடுக்க நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் எடுக்க வேண்டும். எனினும், நாட்டுப் பிரஜைகளின் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உறுதியான அக்கறை எடுக்கப்படின் பிழையான சக்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

அன்ஸல் தொழிலாளர்களின் போராட்டத்தை பிரதமர் நேரடியாக அணுகியது வரவேற்கத்தக்கது. அதேபோன்று அரசாங்கம் தொழிலாளர் போராட்டங்களில் தலையிட வேண்டும். தலையிடுவதுடன் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தொழிலாளர்களின் போராட்டம் அமைதியைக் குலைக்கும், அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையாக எப்போதுமே அர்த்தம் கொள்ளப்படலாகாது.

தொழிலாளர்களின் போராட்டங்களில் பொலிசாரின் தலையீடு எல்லைப்படுத்தப்பட வேண்டம். தொழிற்சாலைகளுக்கு, சொத்துகளுக்கு உயிர்களுக்குச் சேதம் விளைவித்து அமைதியைக் குலைக்கும் விதத்தில் தொழிலாளர்களின் நடவடிக்கைகள் அமைந்தாலன்றி பொலிசார் தலையிடக் கூடாது.

கடந்த 9ந் திகதி அன்ஸல் தொழிலாளர்கள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் பாதயாத்திரை சென்றதாகத் தகவல்கள் எதுவும் இல்லை. அந்த நிலையிலும் தொழிலாளர்கள் மீது கண்ணீர்ப் புகை பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது பொலிசாரின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கையே.

இந்நாட்டு மக்களை எடுத்ததற்கெல்லாம் அடக்கியும், ஒடுக்கியும் சுட்டுக் கொன்றும் பழக்கப்பட்ட, அதற்கான அரசியல் சூழ்நிலையில் வாழ்ந்த பாதுகாப்புப் படையினரதும், பொலிசாரினதும் பொறுப்புக்கள் புதிய அரசாங்கத்தின் கீழ் மாறுபட்டதாக அமைய வேண்டும். அவை பற்றி அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

மக்களின் ஜனநாயக உரிமைகளின் தலையிடாத (பொது அக்கறை பாதிக்கப்படாத வகையில் மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும்) கடமைகளையே செய்ய கடமைப்பட்டவர்கள் என்ற புதிய பாதுகாப்பு ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும்.

## வட அயர்லாந்து...

யது பிரித்தானிய ஏகாதிபதியமும் அதன் யூனியனிஸ்டு எடுபிடிகளும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. பிரித்தானிய அரசாங்கம் கத்தோலிக்க ஐரிஷ்காரர்கட்கு எதிராகவும், ஐ.ஆர்.ஏ எனச் சந்தேகிக்கப்பட்டோருக்கு எதிராகவும் கொடுமையாகச் செயற்பட்டு வந்துள்ளது. அது எந்த வகையிலும் ஐ.ஆர்.ஏயின் பயங்கரவாதத்திற்கு இணைந்ததல்ல. சில வழிகளில் அது ஐ.ஆர்.ஏ வன்முறையை விட மோசமாவது.

சிநேகமான முரண்பாடுகளை பகை முரண்பாடுகளாக்குவதில் சுரண்டும் வர்க்கம் சில சமயம் வெற்றி பெறுகிறது. ஆனால் அதற்காக அது கொடுக்க வேண்டிய விலை பெரிது. இது அயர்லாந்து தரும் பாடம். ஏகாதிபத்தியம் இதை விரைவிலேயே மறந்துவிடும் என்பது வரலாறு நமக்கு உணர்த்தும் இன்னொரு பாடம். அவர்கள் மூன்றாம் உலகு முழுவதையும் வட அயர்லாந்துகளாக்கி வருகிறார்கள். அவர்களே உலகின் முதலாவது பயங்கரவாதிகள்.

## போக்குவரத்துத்தடைகள்....

பற்றிய விபரங்களடங்கிய மூன்று அட்டவணைகள் இங்கு தரப்படுகின்றன. பொருட்கள் யாழ்ப்பாணத்தில் தாராளமாக கிடைக்கவும், குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கவும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அக்குழு சில சிபாரிசுகளை வழங்கியுள்ளன.

அவற்றில் சில பின்வருமாறு:

''கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் இருக்கும் பரிசோதனை இடங்களில் இராணுவத்தினராலும், தீவிரவாத அமைப்புகளினாலும் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்க அறவிடப்படும் பணத்தை அறவிடாது விட்டால் பொருட்களை கொண்டு செல்ல ஏற்படும் செலவு குறையும். அச் செலவு குறைந்தால் பொருட்களின் விலையும் குறையும்.

ஆனையிறவுப் பாதையை திறப்பதில் நிலவும் தடைகள் அகற்றப்படும் வரை சங்குப்பிட்டி பாதையை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதனூடாக யாழ்ப்பாணத்திற்கு பொருட்கள் தனியார் வர்த்தகர்களாலும், அரசாங்கத்தினாலும் அனுப்பப்பட முடியும். தனிப்பட்ட பிரயாணிகளும் பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் சங்குப் பிட்டி பாதை திறக்கப்படின் பிரயாணச் சுணக்கம் தவிர்க்கப்படலாம்.

சங்குப்பிட்டி பாதை திறக்கப்படவும், படகுச்சேவை ஒழுங்குகள் செய்யப்படும் வரை கிளாலி படகுச் சேவையை அரசாங்கம் சட்டபூர்வமானதாக்கலாம். பகல் நேரத்தில் மட்டும் படகு சேவை நடத்தப்படலாம். அப்பகுதியில் அரசின் தாக்குதல்களை நிறுத்தலாம் அவ்வாறெனில் பொருட்கள் எவ்வித கஷ்டமுமின்றி அவ்வழியால் கொண்டு செல்லப்படலாம்.''

இது இவ்வாறிருக்க பொருளாதாரத்தடை நீக்கம் பற்றியும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவர் ''அரசாங்கத்தின் நடவடிக்கைகளை வடபகுதி மக்கள் வரவேற்கின்றனர். ஆனால் மீண்டும் முன்னர் போன்று பேச்சுவார்த்தைகள் முறிவுகள் ஏற்பட்டு யுத்த நிலைமை தொடருமோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் இருக்கிறது. அத்துடன் அரசாங்கம் பொருளாதாரத் தடை போன்ற தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சினைகளை தீர்த்துவிட்டு அடிப்படையான பிரச்சினைகளுக்கு பொ.ஷ.ஐ.முன்னணி அரசாங்கம் தீர்வு காணாது தட்டிக் கழித்து விடுமோ என்ற ஐயமும் மக்கள், மத்தியில் நிலவுகின்றது'' என்று தெரிவித்தார்.

## பண்டாரநாயக்கா சில ......

தனித்தனி தேசிய இன உணர்வுகளே இலங்கை மக்களிடம் மேலோங்கியிருக்கிறது. சிறுபான்மை இனங்கள் இலங்கைத் தேசியத்தின் பகுதியாக நடாத்தப்படாமையினாலேயே இவ்வாறான பிளவுபட்ட தேசிய இன உணர்வுகள் மேலோங்க வழி ஏற்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் சிறுபான்மையினங்களை இலங்கைத் தேசியத்துடன் இணைக்கப்படுவதற்கான அடித்தளமாவது இடப்பட்டிருக்க முடியும்.

தமிழரசுக் கட்சி காலிமுகத்திடலில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அரசாங்கமும், பொலிஸாரும் நடந்து கொண்ட விதமும், 1958ம் ஆண்டு இனக்கலவரமும் விமர்சன ரீதியாக நோக்கப்பட வேண்டியதே. ஆயினும் இனக்கலவரம் நடந்து கொண்டிருக்கையில் அல்லது அதனையடுத்து இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை வலியுறுத்தி, இனக் கலவரத்தை கண்டித்து கண்டி போகம்பர மைதானத்தில் ஆற்றிய உரை பற்றி குறிப்பிடத்தவறலாகாது.

கலவரத்தை மேலும் தூண்டும் விதத்திலன்றி கலவரத்திற்கு முற்றுப்புள்ளியிட அவர் ஆற்றிய அந்த உரை பற்றி அவரினுடைய அரசியலுடன் உடன்படாதோர் கூட வியந்து குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வுரையினால் பண்டாரநாயக்காவின் தேசிய தலைமைத்துவப் பண்பு மேலும் உயர்ந்ததாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங் பிரிவு)யின் தலைவர் என். சண்முகதாசன் அடிக்கடி குறிப்பிட்டு வந்தமை உற்று நோக்கத்தக்கது.

பண்டாரநாயக்காவின் 'எமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்து கொள்வோம்' என்ற கோஷத்தின் அடிப்படையில் அறிமுகம் செய்த தேசிய பொருளாதாரம் கட்டிவளர்க்கப்பட்டிருப்பின் இன்று திறந்த பொருளாதாரம் என்ற ரீதியில் அந்நியக் கொம்பனிகளே எமது பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. அவரின் ஆட்சிக்காலம் முடிவடைந்த போது இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு நல்லதொரு அடித்தளமிடப்பட்டிருந்தது. தேசிய பொருளாதாரம் வளர்ச்சி கண்டிருந்தது.

அவரின் தேசியப் பற்றிலும், இலங்கைத் தேசத்தை கட்டி வளர்ப்பதில் அவரின் அக்கறையிலும் வெறுப்புக் கொண்ட வெளிநாட்டு சக்திகள் அவரின் கொலைக்குப் பின்னால் இருந்திருக்கலாம் என்பதை அவரின் கொலை வழக்கு விசாரணை அறிக்கைகளை படிக்கும் போது உணர முடியும்.

எனவே இந்நாட்டின் தலைவர்கள் என்று போற்றப்பட்டவர்களில் எவரிடமும் இருக்காத தேசிய தலைமைத்துவப் பண்புகள் காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவிடம் இருந்தன என்பதை அறிய முடியும்.

பண்டாரநாயக்காவை ஆய்வு செய்யும் போது அவர் சிங்கள தேசிய இன உணர்வின் தீவிரமான செல்வாக்குக்கு உட்பட்டவராகவும், இந்திய வம்சாவளி மக்களுக்கெதிரான உணர்வுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவராகவும் இருந்தார் என்பதை விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்க்கத் தவறக்கூடாது. அதே வேளை அவர் ஒரு சோஷலிசவாதியோ, கம்யூனிஸவாதியோ அல்ல. நிர்வாக விடயங்களில் எடுத்துக் கொண்ட விடயங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதில் பலமான தலைவராகவும் இருக்கவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ளல் அவசியம்.

## யுத்த நிறுத்தம்...

இரண்டு, பொதுவான யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்படாமலே புலிகளை தாக்காது இருப்பது என்று அரசாங்கம் முடிவெடுத்துத் தாக்காமல் இருக்கலாம். அதே போன்று அரசாங்க பாதுகாப்பு படையினரைத் தாக்குவதில்லை என்று புலிகள் முடிவெடுத்து தாக்காமல் இருக்கலாம். இந்த அணுகுமுறையினால் தாக்குதல் நடைபெற்றாலும் பாதிப்புகள் ஏற்படாது.

எது எவ்வாறெனினும் பாதுகாப்பான முறையில் சுதந்திரமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமெனில் யுத்த நிறுத்தம் ஒரு உடன்பாட்டுடன் அமுல் செய்யப்படுவது அவசியமாகும். பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணப்படும் வரை தாக்குதல்கள் இடம்பெறாது நிலைமைகளை இருதரப்பினரும் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டியதும் அவசியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI පුදිය පූමි

# 10 லட்சம் மேலதிக வாக்குகளால் சந்திரிகா வெற்றி பெறுவார்!

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடவுள்ள பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க 10 லட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவார் என்று அரசியல் விமர்சகர்கள் அறிக்கை செய்துள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலில் பொ.ஜ.ஐ. முன்னணி பெற்ற மேலதிக வாக்குகள் 3,98,453 ஆகும். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற மொத்த வாக்குகள் 143,307 ஆகும்.

தேர்தலுக்கு பின்னர் பொ.ஜ.ஐ. முன்னணி அரசிற்கு ஆதரவு வழங்கியுள்ள பிரதியமைச்சர் சந்திரசேகரனின் சுயேட்சைக்குழு பெற்ற 27,115 வாக்குகளும் தமிழர் விடுதலை கூட்டணி பெற்ற 1,32,461 வாக்குகளும் பொ.ஜ.ஐ. முன்னணியின் வேட்பாளருக்கே அளிக்கப்படும்.

மேற்படி வாக்குகள் யாவும் சந்திரிகா குமாரணதுங்ககிடைத்தால் அவருக்கு மேலதிகமாக 692,366 வாக்குகள் கிடைக்கும்.

இதைவிட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)யும் ஜனாதிபதித் தேர்தலில் பொ.ஜ.ஐ. முன்னணியின் வேட்பாளரையே ஆதரிக்கவுள்ளது.

இ.தொ,கா தலைவர் பொ.ஜ.ஐ. முன்னணியுடன் நடத்தி கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகள் வெற்றியளிப்பின் இ.தொ.கா விற்கு பொதுத் தேர்தலில் கிடைத்த சுமார் 3 லட்சம் வாக்குகளும் பொ.ஜ.ஐ. முன்னணிக்கே கிடைக்கும்.

அந்த அடிப்படையில் 10 லட்சத்துக்கு மேற்பட்ட மேலதிக வாக்குகளால் சந்திரிகா குமாரணதுங்க வெற்றிபெறுவார் என்று கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்தில் இருப்பதனால் கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு வாக்களித்தவர்களில் கணிசமானோர் பொ.ஜ.ஐ. முன்னணிக்கு வாக்களிக்கக் கூடும் என்று மக்களின் அபிப்பிராயத்திலிருந்து தெரியவருகிறது.

அதேவேளை காமினி திஸாநாயக்க எதிர்க்காட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டதற்குப் பிறகு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ தலைமையில் ஒரு குழு ஐ.தே. கட்சிக்குள் காமினி திஸநாயக்காவிற்கு எதிராக செயற்பட்டு வருகின்றது. எனவே ஐ. தே. கட்சியின் ஜனாதிபதி அபேட்சகரான காமினி திஸநாயக்காவிற்கு கட்சிக்குள் இருந்து பூரண ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகமே.

முன்னர் வெளிவந்த செய்திகளின் படி ஒஸி அபேகுணசேகர சுயேட்சையாக போட்டியிடுவாராயின் அவர் ஐ.தே.கட்சி வாக்குகளையே உடைத்து எடுக்க வேண்டியவராயிருப்பார்.

ஐ.தே. கட்சி எதிர்கட்சியிலிருப்பதால் பொதுத்தேர்தலின் போது அரசாங்கத்திலிருந்து கொண்டு அரச வளங்கள் அனைத்தையும் பாவித்தது போன்று ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு பாவிக்க முடியாதிருக்கும்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரசார சாதனங்களான லேக்கவுஸ், தொலைக்காட்சி சேவைகள் என்பனவற்றை பூரணமாக ஐ.தே.கட்சியால் பயன்படுத்த முடியாது.

இந்த காரணங்களினாலும் ஐ.தே.கட்சிக்கு மேலும் வாக்குகள் குறைவாகவே கிடைக்கும் எனலாம்.

## ரணில், சிறிசேன கூரே ஐ.தே.கட்சியிலிருந்து விலக்கப்படலாம்

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே ஆகியோரை ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றதிலிருந்து கட்சிக்குள் தன்னை பலப்படுத்திக் கொள்வதற்காக காமினி திஸாநாயக்க பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். கட்சிக்குள் அவருக்கு எதிராக செயற்பட்டு வரும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவிற்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் எதிராக விழிப்பாக இருக்காவிட்டால் அரசியலில் எதிர்காலம் இருக்காது என்பதை அறிந்து அவர் செயற்பட்டு வருகிறார்.

அவரின் நடவடிக்கைகளில் முதற்கட்டமாக முன்னாள் அமைச்சரான சிறிசேன கூரே, முன்னாள் பிரதியமைச்சரான ஏ.ஜே. ரணசிங்ஹ ஆகியோருக்கு எதிராக ஒழுங்கு விசாரணைகளை மேற்கொள்ள தயாராகி வருவதாக அறிய முடிகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெற்ற வாக்குகளை விட குறைவான வாக்குகளை ஜனாதிபதி தேர்தலில் பெற்றால் ரணில் குழுவினரின் கடுமையான விமர்சனத்துக்குள்ளாவார் காமினி.

குறைவான வாக்குகளே ஐ.தே. கட்சிக்கு கிடைக்குமென்பதால் விமர்சனத்துக்குளாவதை தடுக்க ஒரு முன் நடவடிக்கையாகவே சிறிசேன கூரே, ஏ.ஜே. ரணசிங்ஹ ஆகியோரின் மீது ஒழுங்கு விசாரணைகளை மேற்கொள்ள இருக்கிறார்.

அதாவது ரணிலின் ஆதரவாளராக இருக்கும் சிறிசேன கூரேயை மௌனமாக்குவதற்கான நடவடிக்கைகளையே முதலில் செய்யவிருக்கிறார்.

அதன் மூலம் ரணிலையும் மௌனமாக்குவதற்கு அல்லது ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தேவைப்படின் அவரை கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கும் நடவடிக்கைகளை காமினி எடுக்கலாம் எனவும் அறிய முடிகின்றது.

## வெளியேற்றங்கள்!

### இ.தொ.கா. அமைச்சர்

ஊவா மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சர் சச்சிதானந்தன் கடந்த மாதம் 16ஆம் திகதி இந்தியாவுக்கு சென்றுள்ளார். அவர் இனிமேல் இலங்கைக்கு திரும்பமாட்டார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் இ.தொ,கா அங்கத்தினர் என்பதும் ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட்டு ஊவா மாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்டு பின்னர் அமைச்சராக நியமனம் பெற்றவர்.

அவர் மீது பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் அதிகார துஷ்பிரயோக முறையீடுகள் என்பன காணப்படுவதும் அதுபற்றி ஊவா மாகாணசபையில் பெரும் சர்ச்சைகள் கிளப்பப்பட்டு வருகின்றன என்பதும் இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

### ஏ.சி.ஏ ஜபார்

கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், செவன லொத்தர் என்பனவற்றின் தலைவராக இருந்த ஏ.சி.ஏ. ஜபார் சிகிச்சைக்காக வெளிநாட்டிற்கு சென்றுள்ளதாக சொல்லப்படுகிறது.

இவருக்கு எதிராக 'துர்நடத்தைகள்' மோசடி குற்றச்சாட்டுகள் இருப்பதாக அவருக்கு கீழ் வேலை செய்த ஊழியர்கள் அறிவித்தனர்.

### டபிள்யூ. ஏ.கே. சில்வா

புகையிரத அதிகாரசபையின் ஆளணி முகாமையாளரான டபிள்யூ.ஏ. கே. சில்வா கட்டாய ,வில் அனுப்பப்பட்டிருந்தது தெரிந்ததே.

சில முறைப்பாடுகளின் காரணமாக கட்டாய லீவில் அனுப்பப்பட்ட அவர் கடந்தவாரம் நாட்டை விட்டு வெளியேறி விட்டார்.

அவர் சிங்கப்பூருக்கு ஊடாக அமெரிக்காவுக்கு அல்லது அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## மக்கள் அரங்கு
### (வாசகர் பகுதி)

எமது அடுத்த சுற்றிலிருந்து ''மக்கள் அரங்கு'' எனும் வாசகர் பகுதியை ஆரம்பிக்கவுள்ளோம். இப் பகுதிக்கு உங்கள் கடிதங்கள், கட்டுரைகள், அபிப்பிராயங்கள் என்பனவற்றைச் சுருக்கமாக எழுதி அனுப்பவும்.

## சி.காசிப்பிள்ளை மறைவு

புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் அவர்களின் தந்தையார் சின்னத்தம்பி காசிப்பிள்ளை செப்டம்பர் 10ஆம் திகதி காலமானார். இறுதிக் கிரியைகள் 11ஆம் திகதி 'தாயகம்' பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியில் நடைபெற்றது.

அக்டோபர் 9ஆந் திகதி மேற்படி விலாசத்தில் நினைவு அஞ்சலி நிகழ்ச்சி நடைபெறும். அன்றைய நிகழ்ச்சியில் சி.கா. செந்தில்வேல் எழுதிய 'மனிதரும் சமூக வாழ்வு' என்ற நூல் வெளியிடப்படும்.

சி.கா.செந்தில்வேல் உட்பட காசிப்பிள்ளையின் குடும்பத்தினருக்கு புதிய ஜனநாயக கட்சி அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

புதிய ஜனநாயக கட்சி
(மத்தியகுழு)
கொழும்பு

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா விலாசம் : இல.14, 57வது ஒழுங்கை, கொழும்பு - 6.
பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலிவீதி, இரத்மலானை.

படிப்பகம்